REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 15 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சித்திரை 3ஆம் நாள் வியாழக்கிழமை 16 ஏப்ரல் 2020

# நாட்டில் 238 யாழில் 16

யாழ்ப்பாணம், ஏப்.16
நாட்டில் அடையாளம் காணப்பட்ட கொரானா தொற்றாளர்களின் எண்ணிக்கை நேற்று 238 ஆக அதி 02

# கே.கே.எஸ். தனிமைப்படுத்தல் நிலையம் பாதுகாப்பானதா?

### கொரோனா தொற்று இலகுவில் பரவ சாத்தியம் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டு




யாழ்ப்பாணம், ஏப். 16
யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தின் பாதுகாப்புத் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் அங்கு தடுத்து வைக்கப்படும் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு கொரோனா பரவக் கூடிய வகையில், தனிமைப்படுத்தல் நிலையம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 02

# 20ஆம் திகதியுடன் ஊரடங்கு நீக்கம்?

யாழ்ப்பாணம், ஏப். 16
இடர் வலயங்கள் தவிர்ந்த மாவட்டங்களில் இன்று காலை 6 மணிக்கு நீக்கப்படும் ஊரடங்குச் சட்டம் மாலை 4 மணிக்கு மீண்டும் நடைமுறைக்கு வரும் எனவும், 20ஆம் திகதி காலை 6 மணிக்கு மீளவும் நீக்கப்படும் எனவும் தெரிவித்துள்ள ஜனாதிபதி ஊடகப் பிரிவு, அன்றைய தினம் ஊடரங்கு 2A

# கனடாவில் தமிழ் தம்பதியை காவு கொண்டது கொரோனா!



கொழும்பு,ஏப்.16
கனடாவில் வசித்து வந்த ஈழத்தமிழ் தம்பதி கொரோனா தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.
நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி இராமநாதபுரத்தில் வசித்து, பின்னர் கனடா ரொறன்ரோ 2A

# அரச, தனியார் பணிகளை ஆரம்பிப்பதில் அரசு தீவிரம்!

கொழும்பு, ஏப். 16
இன்னும் சில தினங்களில் அரச மற்றும் தனியார் துறைப் பணிகளை மீண்டும் ஆரம்பித்து நாளாந்த நடவடிக்கைகளை விரைவில் இயல்புநிலைக்கு கொண்டுவரவேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ குறிப்பிட்டுள்ளார்.
அரசின் அடுத்த கட்ட பணிகள் சம்பந்தமாக அமைச்சுக்களின் செயலர்களுடன் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். 02

# குத்தரிசி விலையால் குழப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 16
யாழ்ப்பாண மாவட்டத்தில் குத்தரிசியை அதி உச்சபட்ச சில்லறை விலையாக 125 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியாது. 135 ரூபாவுக்கே விற்பனை செய்ய முடியும். யாழ்ப்பாண மாவட்டச் செயலர் பரிந்துரைத்த விலைக்கு 2A

## ஹிஸ்புல்லா கைது

கொழும்பு,ஏப்.16
உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லா குற்றப் புலனா 2A

# தனிமைப்படுத்தலுக்கு சென்றோர் கோர விபத்து

### ஒருவர் உயிரிழப்பு 29 பேர் படுகாயம்



ஹற்றன்,ஏப்.16
தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவோரைக் கொண்டு சென்ற பஸ் - லொறி ஒன்றுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்ததுடன், 29 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் 2A

# ஊரடங்கு அனுமதியில் வர்த்தகர் முறைகேடு!

### அனுமதிப் பத்திரம் யாழ்ப்பாண மாவட்டச் செயலரால் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 16
அரசின் அபிவிருத்திப் பணிகளுக்கு சிமெந்து எடுத்து வருவதற்கான அனுமதியைப் பெற்று, வியாபார 02

# தற்கொலை குண்டுதாரியுடன் ரிசாட்டின் சகோதரர் தொடர்பு!

### 'திடுக்' தகவல்களை வெளியிடுகிறது பொலிஸ்

கொழும்பு, ஏப். 16
கடந்த வருடம் ஏப்ரல் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய தற்கொலைக் குண்டுதாரியுடன் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் பதியுதீன் நேரடித் தொடர்பைப் பேணியுள்ளார் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியவை வரு 2A

# 'எமக்கு தொடர்பு இல்லை'

### ரிஷாட் மறுப்பு

கொழும்பு, ஏப். 16
" எனது சகோதரர் ரியாஜ் பதியு
தீனை அவர் வீட்டிலிருந்தபோது
குற்றப்புலனாய்வுப் பிரிவினர்
அங்கு சென்று கைது செய்துள்
ளனர். கடந்த ஏப்ரல் குண்டு த்
தாக்குதல் தொடர்பில் சம்பந்தம்
இருப்பதாகக் கூறியே 02







## கே..கே.எஸ்....

அத்துடன், தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள் எவையும் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும், மருத்துவர்களும் அவர்களைச் சென்று பார்வையிடுவதில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுவிஸ் மதபோதகருடன் நெருங்கிப் பழகிய தாவடி வாசிக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது. இதனையடுத்து மதபோதகருடன் நெருங்கிப் பழகிய 20 பேர் காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் நிலையத்தில் 4 அறைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 6 பேருக்கு கடந்த முதலாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது. எஞ்சிய 14 பேருக்கும் இனம்காணப்படவில்லை. நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் கட்டச் சோதனையில் 8 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது. சுவிஸ் மதபோதகருடன் கடந்த மாதம் 15ஆம் திகதியே அவர்கள் இறுதியாகத் தொடர்புபட்டிருந்தனர். சுமார் 28 நாள்கள் கழிந்த பின்னர் அவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் மையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்து கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 6 பேரிடமிருந்து எஞ்சியோருக்கு பரவியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

அவ்வாறு கொரோனா பரவுவதற்கான வாய்ப்புக்கள் தனிமைப்படுத்தல் மையத்தில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அறைகள் ஒவ்வொன்றிலும் கட்டில்கள் குறித்த இடைவெளியில் போடப்பட்டுள்ளன. 4 அறைகளிலும் ஒவ்வொரு அறைகளுக்கும் ஒரு குளியலறை, மலசலகூடமே உண்டு. அந்த அறைகளில் உள்ள அனைவரும் அதனையே பயன்படுத்த வேண்டும்.

இதேவேளை உணவு அருந்துவதற்கு தனிமைப்படுத்தலுள்ளவர்கள் ஓர் பொது இடத்திலேயே அமரவேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அத்துடன் உணவுகளும் ஒரு பெட்டியில் ஒன்றாகப் போட்டே வழங்கப்படுகின்றன. இவை எல்லாம் கொரோனா தொற்று ஒருவருக்கு ஏற்பட்டாலும் ஏனையோருக்கு பரவக் கூடிய சூழல் இருப்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

மேலும், தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் சாதாரண மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை. அத்துடன் மருத்துவ ரீதியான கண்காணிப்பும் மேற்கொள்ளப்படுவதில்லை. மருத்துவர்களும் அவர்களைச் சென்று பார்வை யிடுவதில்லை என்று கூறப்படுகின்றது.

தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கியிருந்த ஏனையோருக்கு கொரோனா தொற்று நீண்ட நாள்களின் பின்னர் கண்டறியப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, தனிமைப்படுத்தல் மையங்கள் இராணுவத்தினரதும் சுகாதார சேவைகள் பணியாளர்களது கண்காணிப்பிலும் இருக்கின்றன. அதனை அவர்கள் சரியான முறையில் பராமரிக்க வேண்டும்.

எவ்வாறு இந்தத் தொற்று ஏற்பட்டது என்றும் தெளிவாகக் கூறி விட முடியாது. மதபோதகர் ஊடாக வந்ததா? அல்லது அங்கு தங்கியிருந்தவர்கள் ஊடாக வந்ததா என்பது பற்றி தெளிவாகக் கூற முடியாத நிலைமை காணப்படுகின்றது. கொரோனா தொற்று உள்ள ஒருவர், சந்தேகத்துக்கு இடமானவர்கள் இருக்கின்றபோது அவர்கள் ஒருவரோடு மற்றவர் குறிப்பிட்ட இடைவெளியைப் பேண வேண்டும். தனிமைப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் அனைவரையும் ஒன்று கூடுகின்ற சந்தர்ப்பங்களை இல்லாமல் செய்யவேண்டும், என்றார்.

(ஒ,5)

## அரச....

கடமைகளை தடையின்றி மேற்கொள்ளக்கூடிய வகையில் ஊரடங்கு சட்டத்தை தளர்த்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மக்கள் ஒன்றுகூடுவதற்கு இடமளிக்காது உரிய சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றி பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு அமைச்சுக்களின் செயலர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

விவசாய, மீன்பிடி மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட கைத்தொழில் நிறுவனங்களை மீண்டும் செயற்படுத்துவதற்கு தேவையான பின்புலத்தை அமைப்பதற்குத் தேவையான உதவியை அமைச்சுக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அமைச்சுக்களுக்கு பணிப்புரை விடுத்தார். புதிய பொருளாதார முறைமையொன்றை கட்டியெழுப்பும் பொறிமுறையை அமைக்கும் பொறுப்பை அமைச்சுக்களுக்கு வழங்குவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதிகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் உள்ளிட்ட இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய நாடுகள் முகம்கொடுத்துள்ள நிலைமையை கருத்திற்கொண்டு தேசிய விவசாய பொருளாதாரம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்றுமதி விவசாய பயிர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தி பயிர்ச்செய்ய முடியுமான நிலங்களை வினைத்தி றன்மிக்க வகையில் அதற்கு பயன்படுத்திக்கொள்ள தேவையான பின்புலத்தை ஏற்படுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இதற்காக அரச பொறிமுறையை கிராமங்களுக்கு கொண்டு செல்ல வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி விளக்கினார். (ஒ,5)

## நாட்டில்...

கரித்தது. நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் 15 பேரும் தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டிருந்த நிலையில் நேற்று 5 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டது.

நேற்று இனங்காணப்பட்ட ஐவரில் இருவர் யாழ்ப்பாணம் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களாவர். நேற்று இனங்கண்டவர்களுடன் வடக்கில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளது.

அரியாலையைச் சேர்ந்த 60 வயதுடைய ஆணுக்கும் 61 வயதுடைய பெண்ணுக்குமே கொரோனா வைரஸ் தொற்றுள்ளதாக பரிசோதனையின் மூலம் கண்டறியப்பட்டது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி அரியாலை தேவாலயத்தில் ஆராதனை நடத்திய சுவிஸ் போதகருடன் நெருங்கிப் பழகியவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, நாட்டில் அடையாளம் காணப்பட்ட 237 தொற்றாளர்களில் 63 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள னர். 7 பேர் உயிரிழந்துள்ளனர். 167 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தொற்றுக்குள்ளானவர்கள் என்ற சந்தேகத்தில் 144 பேர் மருத்துவமனைகளில் கண்காணிப்பில் உள்ளனர். (எ-22)

## ஊரடங்கு...

நோக்கத்துக்கு அதனைப் பயன்படுத்திய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தக நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஊரடங்கு அனுமதிப் பத்திரம் யாழ்ப்பாண மாவட்டச் செயலரால் நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகரில் இயங்கும் கட்டட விற்பனை வர்த்தக நிறுவனம் ஒன்று , அரசின் அபிவிருத்திப் பணிகளுக்குரிய சிமெந்தை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கு ஊரடங்கு அனுமதியை வழங்குமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை கோரியிருந்தது. அந்த நிறுவனத்தின் 5 பாரவூர்திகளுக்கு ஊரடங்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அந்த அனுமதியைப் பயன்படுத்தி, அத்தியாவசியப் பொருள் அல்லாத சிமெந்து எடுத்து வரப்பட்டது. இருப்பினும் அரசின் அபிவிருத்திப் பணிகளுக்கு அந்த வர்த்தக நிறுவனம் சிமெந்தை வழங்கவில்லை என்பதை அறிந்த யாழ்ப்பாண மாவட்டச் செயலர், வழங்கப்பட்ட ஊரடங்கு அனுமதிப் பத்திரத்தை திரும்ப ஒப்படைக்குமாறு மேற்படி வர்த்தக நிறுவனத்தை அறிவுறுத்தியுள்ளார்.

முறைகேடாகச் செயற்பட்டால், எடுத்து வரப்படும் பொருள்களை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

இதேவேளை வேறு எவராவது இவ்வாறான முறைகேட்டில் ஈடுபட்டால், யாழ்ப்பாணத்துக்கு நுழைவதற்கான ஆனையிறவு, பூநகரியில் பாதுகாப்புத் தரப்பினர் ஊடாக பொருள்களைச் சோதனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும், மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் கூறியுள்ளார்.

(ஒ,5,105)

## எமக்கு...

அவரைக் கைது செய்து, ஊடகங்கள் வாயிலாக அதனைத் தெரியப்படுத்தினர். எனது சகோதரரர் அநீதியாகக் கைது செய்யப்பட்டமைக்கு எதிராகவும், பழிவாங்கலுக்கு எதிராகவும் நிச்சயமாக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராகின்றோம்."

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

சகோதரரின் கைது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“நானோ, எனது குடும்பத்தினரோ அல்லது சகோதரர் ரியாஜ் பதியுதீனோ, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதச் சம்பவத்துடன் எந்தவொரு தொடர்பும் இல்லாதவர்கள் என்பதை, மிகவும் உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

இந்த நாட்டிலே பயங்கரவாதம் உருவாகுவதற்கு ஒருபோதும் நாங்கள் உதவ மாட்டோம். அனுமதிக்கவும் மாட்டோம். அதற்கெதிராக அனைத்துக் கட்டங்களிலும் செயற்பட்டிருக்கின்றோம். செயற்பட்டு வருகின்றோம். ஆனால், இந்தப் பயங்கரவாதச் சம்பவத்துடன் எனது சகோதரரைத் தொடர்புபடுத்தி, இவ்வாறானதொரு அநியாயச் செயலை செய்திருப்பதற்கு, எனது அரசியல் மீது கொண்டிருக்கின்ற காழ்ப்புணர்ச்சியே காரணம். அதனால்தான் இந்தக்கைதுநடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றும் நான் நம்புகின்றேன். " என்றார்.

(து-22)

# இரணவில, வெலிகந்தவுக்கு கொரோனா தொற்றாளர்கள்

*யாழ்ப்பாணம், ஏப். 16*

*காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் மையத்தில் நேற்றுமுன்தினம் கண்டறியப்பட்ட கொரோனா நோயாளிகளில் 4 பேர் வெலிகந்த மருத்துவமனைக்கும், 4 பேர் சிலாபம் இரணவில மருத்துவமனைக்கும் நேற்று மாலை 3 மணியளவில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ஒ,5)*

# 3ஆம் கட்ட சோதனையில் யாழில் கண்டறியப்பட்ட நோயாளர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 16
சுவிஸ் மதபோதகருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய அரியாலையைச் சேர்ந்த 60 வயது ஆண் மற்றும் 61 வயது பெண் ஆகியோருக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களுக்கு மூன்றாம் கட்டச் சோதனையிலேயே கொரோனா தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று கொரோனா பரிசோதனைக்காக 24 பேரின் மாதிரிகள் எடுக்கப்பட்டன. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சந்தேகத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட 4 பேர், காங்கேசன்துறை தனிமைப்படுத்தப்பட்ட நிலையத்தில் உள்ள 4 பேர், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 7 பேர் நல்லூர் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 2 மற்றும் முழங்காலில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையத்தில் உள்ள 7 பேரின் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணம் மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் 23 பேரினது மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டது. அவர்களில் காங்கேசன்துறையில் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் 2 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் யாழ்ப்பாணம் அரியாலை தேவாலயத்தில் கடந்த மார்ச் 15ஆம் திகதி ஆராதனை நடத்திய சுவிஸ் மதபோதகருடன் நெருங்கிப் பழகிய 17 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு கடந்த மாத முற்பகுதியில் வருகை தந்த மதபோதகருடன் நெருங்கிப் பழகிய 20 பேர் மார்ச் 22ஆம் திகதி தனிமைப்படுத்தல்நிலையத்தில் தங்கவைத்து கண்காணிக்கப்பட்டனர். அவர்கள் 20 பேரிடமும் ஏப்ரல் முதலாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் மாதிரிகள் பெறப்பட்டு முதல்கட்ட பரிசோதனை நடத்தப்பட்டது.

அதில் மானிப்பாயைச் சேர்ந்த மதபோதகர் உள்பட 6 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. அவர்கள் 6 பேரும் வெலிகந்தை மருத்துவமனை கொரோனா சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டனர். இந்த நிலையில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்ட ஏனைய 14 பேருக்கு நோய் அறிகுறி இல்லாத போதும் முதல் கட்டத்தில் அடையாளம் காணப்பட்ட 6 பேருடன் நெருக்கமாக இருந்தவர்கள் என்ற அடிப்படையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டனர். 14 பேரில் 8 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்டது. ஏனைய 6 பேரில் 4 பேருக்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அதில் இருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

# இயல்பு நிலையை அவசரமாக ஏற்படுத்த அரசு தீவிர முயற்சி

கொழும்பு, ஏப். 16
நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு தொழிற்சாலைகள், விவசாயம் மற்றும் வியாபார நடவடிக்கைகளை வழமைபோன்று முன்னெடுப்பதற்கான பரிந்துரைகளை விரைவில் வழங்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மாகாண சுகாதார பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

தேசிய பொருளாதாரத்தை பாதுகாக்கும் வகையில் நாளாந்த பொருளாதார செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய வாய்ப்புகளைகண்டறியும்நோக்குடன் மாகாண மட்டத்தில் தகவல்களை கேட்டறிவதற்கான சந்திப்பொன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

நாட்டின் அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் உள்ளிட்ட சுகாதார துறை அதிகாரிகள் தமது மாகாணங்களின் தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதிக்கு விளக்கினர்.

தற்போதைய நிலைமைகளை கருத்திற் கொண்டு கைத்தொழில் நிறுவனங்கள், விவசாய மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை முன்னர் போன்று முன்னெடுப்பதற்கு தேவையான பணிப்புரைகளை சுகாதார பணிப்பாளரின் ஊடாக உடனடியாக முன்வைக்குமாறு ஜனாதிபதி மாகாண சுகாதார பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஷமாகாண மட்டத்தில் கிடைக்கப் பெறும் சுகாதார பரிந்துரைகளை கருத்திற் கொண்டு தற்போதைய கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து தீர்மானி க்கப்படும்.

அந்தந்த மாகாணங்களில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள், அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் மற்றும் தற்போது செயற்படுத்தப்படும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. நாளாந்தம் இடம்பெறும் நோயாளிகளை கண்டறியும் பரிசோதனை சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது. (ஒ,த,20)

---

## 20ஆம்...

எப்போது மீள நடைமுறைப்படுத்தப்படும் என்ற நேரத்தை வெளியிடவில்லை.

20ஆம் திகதியுடன் ஊரடங்கு நீக்கப்படலாம் என்று சுகாதார அமைச்சர் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில், ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று இவ்வாறானதொரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனா தொற்று பரவலை கவனத்திற்கொள்ளும் போது இடர் வலயங்களாக இனம் காணப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைமுறையிலிருக்கும் ஊரடங்கு மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் இருக்கும்.

ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்கு இன்று வியாழன் காலை 6 மணிக்கு நீக்கப்பட்டு பிற்பகல் 4 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். இம் மாவட்டங்களில் மீண்டும் ஊரடங்கு சட்டம் ஏப்ரல் 20 திங்கள் காலை 6 மணி வரை நடைமுறையிலிருக்கும். 20ஆம் திகதி காலை 6 மணிக்கு நீக்கப்படும் ஊரடங்கு சட்டம் எப்போது மீள நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்றுள்ளது. ( ஒ,5)

## தனிமை..

தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று மாலை கண்டி கொழும்பு பிரதான வீதியில் வரக்காபொல நகரப் பகுதியில் நடந்துள்ளது.

வரக்காபொலப் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி மரக்கறிகளை ஏற்றிச் சென்ற லொறியும், கொழும்பிலிருந்து கொரோனா தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவோரை ஏற்றிக் கொண்டு, திருகோணமலை சம்பூர் பகுதியை நோக்கிச் சென்ற கடற்படையின் பஸ்ஸும் மோதியதாலேயே இந்தக் கோர விபத்து நடந்துள்ளது.

லொறியின் சாரதி உயிரிழந்துள்ளார். 29 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் மூவர் கடற்படையினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேவேளை விபத்தை அடுத்து தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக அழைத்துச் செல்லப்பட்ட மூவர் தப்பியோடியுள்ளனர். அவர்களில் இருவர் பொலிஸாரால் பின்னர் பிடிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## குத்தரிசி...

விற்க முடியாது என்று யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15 அரிசி ஆலை உரிமையாளர்களும் இணைந்து, பாவனையாளர் அதிகார சபையின் தலைவருக்கு கடிதம் அனுப்பவுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசனுக்கும், யாழ்ப்பாண மாவட்ட அரிசி உரிமையாளர்கள், வர்த்தகர்களுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றிருந்தது. குத்தரிசிக்கு அரசு கட்டுப்பாட்டு விலை விதிக்கவில்லை. இதனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. அதற்கு கட்டுப்பாட்டு விலைக்குரிய பரிந்துரையை மேற்கொள்வதற்காக அந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

கீரிச் சம்பாவுக்கு அரசு கட்டுப்பாட்டு விலையாக 125 ரூபா நிர்ணயித்து ள்ளதால், அந்த விலையை விட அதிகரித்த விலையில் எந்தவொரு அரிசியையும் விற்பனை செய்ய முடியாது என்று தெரிவித்த மாவட்டச் செயலர், குத்தரிசியை அரிசி ஆலை உரிமையாளர்கள் மொத்த விற்பனையாளர்களுக்கு 115 ரூபாவுக்கு வழங்க வேண்டும் என்றும், அதற்கு உச்சபட்சமாக 125 ரூபா சில்லறை விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைத்திருந்தார்.

மாவட்டச் செயலரின் பரிந்துரைக்கு அமைவாக விற்பனை செய்ய முடியாது என்று தெரிவித்துள்ள அரிசி ஆலை உரிமையாளர்கள் ஆகக் குறைந்தது 130 ரூபாவுக்கே தாம் விற்பனை செய்ய முடியும் எனவும், அதிகபட்ச சில்லறை விலையாக 135 ரூபாவை நிர்ணயிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர். (ஒ,5)

## தற்கொலை...

மாறு:

“கடந்த ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் கடந்தகாலத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து புதிய கோணத்தில் தற்போது விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. இதன்போது கிடைக்கப்பெறும் தகவலுக்கமையவே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுவருகின்றனர்.

குறிப்பாக ரியாஜ் பதியுதீன் தற்கொலைக் குண்டுதாரி ஒருவருடன் நேரடித் தொடர்பைப் பேணியுள்ளார். குண்டுத் தாக்குதல் நடத்தப்படுவதற்கு அண்மித்ததொரு காலப்பகுதியில் பிரபலமான ஹொட்டலொன்றில் குண்டுதாரியுடன் ஒன்றாக இருந்து, கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

குண்டுத் தாக்குதல் தொடர்பில் பல விசாரணைக்குழுக்கள், பலகோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றன. தாக்குதல் தொடர்பில் சி.ஐ.டியினரால் இதுவரையில் 119 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ரீ.ஐ.டியினரால் 78 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

40 பேரை சி.ஐ.டியினர் தடுத்துவைத்து விசாரணை நடத்திவருகின்றனர். 33 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ரி.ஐ.டியின் விசாரணையின்கீழ் 50 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் சட்டத்தரணியும் ஒருவர். அவர் இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகளுடன் தொடர்பைப் பேணியுள்ளார். அவர்கள் தொடர்புபட்ட அமைப்புகளில் பதவிகளை வகித்துள்ளார்.” என்றார் பொலிஸ் பேச்சாளர்.

அதேவேளை, அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கு தாக்குதலுடன் தொடர்பிருக்கின்றதா என்று ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பொலிஸ் ஊடகப்பேச்சாளர்,

“அவரின் சகோதரர் ஒருவருக்குத் தொடர்பிருக்கின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. விசாரணைகள் தொடர்கின்றன. இது விடயத்தில் பொறுப்புக்கூற வேண்டியது யார் என கருதப்படுமே தவிர நபர்களின் பதவி நிலைகள், சமூக அந்தஸ்து என்பன கருத்தில்கொள்ளப்படாது.” என்றார். (த44)

## ஹிஸ்புல்லா...

ய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு தற்கொலைக் குண்டுதாரி களுடன் தொடர்பை வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே புத்தளத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் பதியுதீன் நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-22)

## கனடா...

வில் குடியேறிய புஸ்பராணி நாகராஜா என்பவர் முதலில் உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தாயாரான இவருக்கும் கணவர் நாகராஜாவுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டு கடந்த 4 நாள்களுக்குமுன்னர் மூச்சுத்திணறலால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த திங்கட்கிழமை மனைவி உயிரிழந்தார்.

இவருடைய கணவர் பிரம்டன் வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில், கணவர் நாகராஜாவும் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவர்களது 3 பெண் பிள்ளைகளும் வீட்டில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

# நாடாளுமன்றத்தை கூட்டுவதே ஒரேவழி

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

கொழும்பு,ஏப்.16

**அரசமைப்பு நெருக்கடிக்கு வழிவகுக்காமல் தேர்தல் தொடர்பில் முடிவெடுப்பதற்குரிய கூடுதல் பொறுப்பு நிறைவேற்றுத் துறைக்கே இருக்கின்றது. எனவே, குறிப்பிட்ட காலப்பகுதியில் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதே மிகப்பொருத்தமான நடவடிக்கையாக அமையும்.**

இவ்வாறு சுயாதீன தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுள் ஒன்றான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நிறைவேற்றதிகாரம், சட்டவாக்கம், நீதி ஆகிய முத்துறைகளில் சட்டவாக்கச்சபை தற்போது இயங்கவில்லை. எனவே, நாட்டு மக்களின் சார்பில் நிறைவேற்றுத் துறையும், நீதித்துறையுமே தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக நிறைவேற்று அல்லது ஏதேனும் ஒரு தரப்பு கோரிக்கை விடுக்கும் பட்சத்திலேயே இது விடயத்தில் நீதித்துறை தலையிட முடியும். எனவே, தற்போதைய சூழ்நிலையில் ஏனைய துறைகளை விடவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கே கூடுதல் பொறுப்பு இருக்கின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதன்படி அரசமைப்பு நெருக்கடிக்கு வழிவகுக்காமல் கலந்துரையாடல் மூலம் தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை, அரசமைப்பு நெருக்கடிக்கு வழிவகுக்காமல் தற்போதுள்ள அரசியலமைப்பு மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம், தேர்தலை நடத்துவதில் எழுந்துள்ள பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது பற்றி ஆராயப்படுகின்றது. அரசமைப்பு நெருக்கடிக்கு வழிவகுக்காமல் மேற்படி வரையறைக்குள் செயற்படுவதற்கே தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் முயற்சிக்கின்றார்.

ஆனாலும் அரசியலமைப்பு நெருக்கடி ஏற்படாமல் இருக்க வேண்டுமெனில் ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். அப்படியானால் மே இறுதிப்பகுதிக்குள் தேர்தல் இடம்பெற வேண்டும். அதற்கான சூழ்நிலை இருக்கின்றதா?

குறிப்பாக தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழு நாளொன்றைத் தீர்மானிக்கும் பட்சத்தில் அக்காலப்பகுதியில் நாட்டில் சாதாரண நிலை நிலவ வேண்டும். கட்சிகளுக்கு சுதந்திரமாக பிரசாரத்தை முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும். அரச பொறிமுறை இயங்க வேண்டும். ஆனால், ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில் இவற்றைச் செய்யமுடியுமா? தேர்தல் நடத்தப்படும் திகதி மட்டுமல்ல அதற்கு முன்னரான பிரசாரக் காலப்பகுதியிலும் சாதாரண சூழ்நிலை நிலவினால் தான் நீதியான, சுதந்திரமான தேர்தலை நடத்த முடியும். அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதும் நிறைவேற்றுத் துறையின் பொறுப்பாகும். எனவே, ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்டும் வகையில் தேர்தலை நடத்த முடியாமல் போகும் எனத் தெரிந்தால், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதே பொருத்தமான நடவடிக்கையாக அமையும்- என்றார்.(க-44)

# கலைஞர்களும் வீட்டில் முடக்கம்

## நிவாரணம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு நடைமுறையால், தவில் நாதஸ்வர வித்துவான்கள் மற்றும் குழுவினருடன் இணைந்த பக்க வாத்தியக் கலைஞர்களும் தொழில் இன்றி வீடுகளில் முடங்கியுள்ளனர்.

இதனைவிட சிற்பக்கலைகளில் ஈடுபடும் சிற்பக் கலைஞர்களும், அவர் சார்ந்த குடும்பங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் விபரங்களைச் சேகரித்து நிவாரணம் வழங்க முன்வர வேண்டும் என்று கலைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்ட மட்டத்தில் 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கலாசாரப்பிரிவில் மேற்படி சகல பிரிவினரதும் விபரங்கள் முறையாகக் கடந்த காலங்களில் தொகுத்து வழங்கப்பட்டன.

ஆனால் கலைஞர்கள் எவருக்கும் இதுவரை எவ்வித நிவாரண உதவிகளும் கிடைக்கவில்லை. எனவே மேற்படி சகல பிரிவினருக்கும் யாழ்.மாவட்டச் செயலர் க. மகேசன் முதற்கட்ட நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என்று கலைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-50)



# திருமலையில் 2,387 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு

திருகோணமலை,ஏப்.16

அரசாங்க நெல் கொள்வனவு திட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி முதல் ஏப்ரல் முதலாம் வாரம் வரை 2,387 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், இதற்காக 135 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாக, மாவட்டச் செயலர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நெல்லானது மாவட்டத்தில் உள்ள 14 அரிசி ஆலைகளிலும், ஏழு களஞ்சியசாலைகளிலும் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது.

நெல் குற்றுவதற்கான அனுமதி அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கப்பெற்றதும் அது தொடர்பான மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்துடன் இம்முறை சிறுபோகத்தில் மாவட்டத்தில் மொத்தமாக 21 ஆயிரத்து 500 ஹெக்டெயர் அளவில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் படவுள்ளது." என்றார். (ஐ-114)

# வீதியில் சடலம் மக்கள் அச்சம்

கொழும்பு,ஏப்.16

அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வீதியில் சடலமாகக் காணப்பட்டதை அடுத்து மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது.

களுத்துறை காலி வீதிக்கு அருகிலேயே இந்தச் சடலம் காணப்பட்டது. பிரதேச மக்கள் 1990 என்ற இலவச நோயாளர் காவு வண்டிச் சேவைக்கு அழைப்பை ஏற்படுத்தினர்.

உயிரிழந்த நபருக்கு காய்ச்சல் அறிகுறிகள் காணப்பட்டமையால், அவரை சோதனையிட்ட பாதுகாப்பு ஆடைகள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதா என ஆராய்வதற்காக சடலம் நாகொட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (க)







திருகோணமலை அன்புவழிபுரம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான வினாப்பத்திரங்கள் அவர்களது வீடுகளுக்கு சென்று வழங்கப்பட்டன. பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தால் இந்த வினாப் பத்திரங்கள் நேற்று வழங்கப்பட்டன. (ஐ-40)

# வெளியில் உலாவ வேண்டாம்

## பொலிஸார் தொடர் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஏப்.16

பொதுமக்கள் வெளியில் செல்வதையும், ஒன்று கூடுவதையும் தவிர்க்கும்படி மட்டக்களப்பில் பொலிஸார் தொடர்ச்சியாக அறிவுறுத்தி வருகின்றனர்.

கொரோனா வைரஸ் காரணமாக பொது மக்களின் பாதுகாப்புக்காக, ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் சிலர் வெளியில் நடமாடுவதை அடுத்தே பொலிஸார் இவ்வாறு அறிவித்து வருகின்றனர். அத்துடன் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொலிஸார் பகல் மற்றும் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இரவு வேளைகளில், பிடிக்கப்படுவோருக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு வருகிறது. இனிவரும் காலங் களில் இவ்வாறு விளையாட்டுக்களில் ஈடுபட்டால் கைது செய்யப்படுவர் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ப-150)

# தேர்தலா? மக்கள் பாதுகாப்பா?

## அரசே தீர்மானிக்க வேண்டும்

*சொல்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்*

யாழ்ப்பாணம், ஏப்.16

**நாடாளுமன்றத் தேர்தலா?, அல்லது மக்களுடைய பாதுகாப்பா? முக்கியம் என்பதை இலங்கை அரசு தீர்மானிக்க வேண்டும். மக்களைப் பாதுகாக்கவே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, தேர்தலை அல்ல என்று தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன்.**



இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு இருந்த காலத்திலேயே இலங்கை அரசாங்கம் நாடாளுமன்றத்தைக் கலைத்து. இது உலக நாடுகளுக்கும் பரவலாம் என எதிர்வு கூறப்பட்டிருந்தது. எனினும் அரசு அவசரப்பட்டு நாடாளுமன்றத்தைக் கலைத்தது. தேர்தலும் அறிவிக்கப்பட்டு அவசர அவசரமாக வேட்பு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. எனினும் கொரோனா வைரஸ் உலக அளவில் பாரிய தாக்கத்தைச் செலுத்தியது. அந்தத் தாக்கம் இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் இலங்கை அரசாங்கம் தேர்தலை நடத்துவதற்கு பல முனைகளிலும் முயற்சிகளை எடுத்து வருகின்றது. தற்போது உள்ள சூழ்நிலையில் மக்களின் பாதுகாப்புத்தான் முக்கியமே தவிர தேர்தல் அல்ல. இதனை அரசாங்கம் சிந்திக்க வேண்டும். உலக அளவில் வைரஸின் தாக்கம் 20 லட்சத்தை தாண்டியுள்ளது. மேலும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். இலங்கையிலும் பாதிப்பு உள்ளது. எனவே இந்த நேரத்தில் தேர்தல் முக்கியமல்ல மக்களைப் பாதுகாக்க வேண்டும். மருத்துவர்கள், சுகாதாரத் துறையினரின் அறிவுரைகளைக் கேட்டு நடந்து கொள்ள வேண்டும் - என்றார். (பு-20)

# சமூகத்தில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் உதவலாம்

*வடக்கு முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவிப்பு*

வவுனியா,ஏப்.16

பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் சமூகக்கடமை அனைவருக்கும் உள்ளது. இதனை அரசியல்வாதிகள் மட்டுமே செய்யவேண்டியதில்லை. சமூகத்தின் மீது அக்கறையுள்ள ஒவ்வாரு குடிமகனுக்கும் இந்தக் கடமையுள்ளது என்று வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தற்போதைய நாட்டு நிலைமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

உலக வல்லரசுகளையே ஆட்டம்காண வைத்துள்ள கொரோனா நோயின் தாக்கத்தால் எமது நாடும் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் எமது நாட்டின் உன்னதமான சுகாதார சேவையுடன் இணைந்து ஏனைய அத்தியாவசிய சேவைகள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதால் பாதிப்புக்கள் கட்டுப்பாட்டுக்குள் இருப்பது ஓரளவு ஆறுதல் தருகின்றது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள நோய்நிலை (கொவிட்19) காரணமாக எல்லோரும் பல வகையிலும் பாதிக்கப்பட்டிருந்தாலும் அன்றாட உழைப்பில் குடும்பத்தை வழிநடத்திய பல குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், ஆதரவற்ற முதியோர்கள், தொற்றா மற்றும் தொற்று நோய்களுக்காக நீண்டகால சிகிச்சை பெறுபவர்கள் எனப் பலர் அன்றாட உணவு மற்றும் மருத்துவ தேவைகளுக்காகப் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள்.

அவர்களுடைய பிரச்சினைகளை இனம்கண்டு நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருந்தாலும் எங்கள் அனைவருக்கும் அப்பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான சமூகக்கடமை உள்ளதை யாரும் மறுக்கமுடியாது. சமூகப்பங்காளி என்றவகையில் நான் முடிந்தவரை என்னாலான பங்களிப்பை விசேட வேலைத்திட்டத்தினூடாக முன்னெடுத்துள்ளேன் - என்றுள்ளது. (ஜ-110)



# வீதிகளில் உறங்கும் முதலை, யானைகள்

*மக்கள் பெரும் அச்சம்*

அம்பாறை,ஏப்.16

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வீதிகளுக்கு வரும் முதலைகள், யானைகள் என்பன அங்கேயே உறங்குவதால் மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தை அண்டிய பிரதான வீதியை ஊடறுத்துச் செல்லும் கழியோடை ஆற்றில் அதிகளவிலான முதலைகள் பெருகி வருகின்றன. தற்போது பெய்யும் மழை காரணமாக ஆற்றை விட்டு இரவிலும், பகலிலும் முதலைகள் வெளியேறுவதுடன் மக்களின் நடமாட்டம் இன்மையால் வீதியோரங்களில் நடமாடித் திரிகின்றன.

இரவு நேரங்களில் அதிகமான சுமார் 9 அடி முதல் 4 அடி வரை நீளமுடைய முதலைகள் வெளியேறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். சிறுபோக வேளாண்மைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், வயல்கள், கால்வாய்கள் அண்டிய பகுதியில் புல் மேயும் எருமை மாடுகள் முதலைகளுக்கு இரையாகின்றன. அத்துடன் இவை நடு வீதியில் உறங்கவும் செய்கின்றன. இதேவேளை யானைகளும் கூட்டமாக காரைதீவு மாவடிப்பள்ளி எல்லையில் சுதந்திரமாக நடமாடித்திரிகின்றன. சுமார் 35 க்கும் அதிகளவான யானைகள் நகர்ந்து செல்லாமல் ஒரு இடத்தில் கூடி நின்று மக்களின் நடமாட்டத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. வனவிலங்கு அதிகாரிகள் யானைகளை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (க-114)



### கொரோனா தொற்றுக் காரணமாக

# புலம்பெயர் உறவுகள் 41 பேர் உயிரிழப்பு

*தமிழ் அரசுக் கட்சி இரங்கல்*

மட்டக்களப்பு, ஏப். 16

கொரோனாவால் நேற்றுவரை ஈழத்துப் புலம்பெயர் உறவுகள் 41 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களை இழந்து நிற்பது பெரும் துயரமாக உள்ளது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

கொரோனா அச்சநிலையை இலங்கை கடந்து விட்டதாக இன்னும் அறிவிக்கப்படவில்லை. இந்தத் துயர நெருப்புக்கு மேலும் எண்ணெய் வார்ப்பதாக எமது புலம்பெயர் உறவுகள் தொடர்பான செய்திகள் நம்மைக் கவலையடையச் செய்கின்றன. நேற்றுவரையான செய்திகளின் அடிப்படையில் ஈழத்துப் புலம்பெயர் உறவுகளாக ஒரு மருத்துவர் உட்பட 41 பேர் கொரோனாவால் காவுகொள்ளப்பட்டுள்ளனர்.

புலம்பெயர் உறவுகளே! உங்களை நீங்கள் தற்காத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்கு மிக முக்கியமானவர்கள். உங்களுடைய பொருளாதாரத்தால் புலத்தின் பொருளாதாரத்தையும் தாங்கிப் பிடிக்கின்றீர்கள். சுகாதார அறிவுறுத்தல்களை உங்களுக்கும், உங்கள் குடும்பத்துக்கும், எங்களுக்குமாக இறுக்கமாகக் கடைப்பிடியுங்கள்.

மலர்ந்திருக்கும் புத்தாண்டு எமக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லையென்றாலும், சம்பிரதாய பூர்வமான எமது வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம். தனிமையைக் காணுங்கள், நமது வழமையான சம்பிரதாயங்களைக் கடைப்பிடியுங்கள், இயற்கை முறைப்படியான நோயெதிர்ப்பு முறைகளைக் கடைப்பிடியுங்கள். தியானம், பிரணாயாமம், கூடிய வரையிலான சைவ உணவு, புலத்தில் நம் வீடுகளிலெல்லாம் செழித்து நிற்கும் முருங்கையிலை என்பவற்றைக் கூடுமானவரை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தார். (த-150)

# பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு

**கொழும்பு,ஏப்.16**

**கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த நாட்டில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் காரணமாக, பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அறிவித்துள்ளார்.**

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் துறையினர் தமது பொருளாதார நிலைமைகளைக் கருத்திற் கொண்டு அரசாங்கத்திடம் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

தமக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் ஒரே தடவையில் வழங்கும் விதத்தில் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை சமுர்த்தி அதிகாரிகள் மூலம் வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் இந்த நிதித் தொகை அவர்களுக்குச் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக சிறு தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்பவர்கள், தனியார் பஸ் சாரதிகள், வாகனச் சாரதிகள், சிறு வியாபாரிகள், கட்டடத் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள், தச்சு வேலை செய்வோர், நாள்கூலியாக வேலை செய்யும் நபர்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள், நாடக நிறுவனங்கள், நிகழ்வுகளுக்கு பொருள்களை வழங்குபவர்கள், சிகை அலங்காரத் தொழிலில் ஈடுபடுபவர்கள், பிராந்தியச் செய்தியாளர்கள் என அனைவரும் உள்ளடக்கப்படுவர்.

இந்த நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப் பத்திரம் சகல பிரதேச சபைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதில் சமுர்த்தியில் இணைந்தவர்கள் மட்டுமல்லாது, ஏனைய அனைவரும் தமக்கான கோரிக்கையை முன்வைக்க முடியும்.

இதற்கு மேலதிகமாக அடையாளம் காணப்பட்டு, காத்திருப்பு பட்டியலிலும் உள்ளடக்கப்படாதவர்கள் இருப்பினும், கிராமக் குழுவின் மூலம் கடைபிடிக்கப் பட்டுள்ள முதியவர்கள், சிறுநீரக நோயாளிகள் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்காக இந்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. கொடுப்பனவுகள் கிராம சேவகர்களால், குறித்த பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று வழங்கப்படும் என்று அத்தியாவசிய சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணி அறிவித்துள்ளது. - என்றார்.(க)

# சந்தை வாய்ப்புப் பற்றி கிளிநொச்சியில் ஆராய்வு

கிளிநொச்சி, ஏப். 16

தற்கால உற்பத்தி மற்றும் சந்தைவாய்ப்புத் தொடர்பாக கிளிநொச்சி மரக்கறிச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுடன் கலந்துரையாடப்பட்டது. கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், விவசாய துறைசார் திணைக்களங்கள், விவசாயிகள் மற்றும் மாவட்டச் செயலக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

விவசாயிகள் போதியளவு மரக்கறிகளை உற்பத்தி செய்வதனாலும் அவர்களுக்கான சந்தைவாய்ப்பு இல்லாததாலும் உணவுப் பொதிகளை வழங்குபவர்கள் மரக்கறிகளையும் கொள்வனவு செய்து வழங்குதல் சிறந்த செயற்பாடாக அமையும். அதேபோல விவசாய உற்பத்திகளைப் பதப்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்த வேண்டிய தேவையும் தற்போது ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது. எனவே காலத்தின் தேவைகருதி மாற்று வழிகளைக் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது என்றும் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. (கு-222)

### சாவகச்சேரியில்

# மருத்துவ சான்றிதழ் வழங்குவது நிறுத்தம்

சாவகச்சேரி, ஏப். 16

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் அவசர தேவைகளுக்காக மருத்துவச் சான்றிதழ் வழங்குவது எதிர்வரும் 18ஆம் திகதிவரை நிறுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாய நடவடிக்கைகள், அத்தியாவசியப் பொருள்கள் ஏற்றி வருவதற்கே ஆனையிறவு ஊடாகப் பயணிப்பதற்கு மருத்துவச் சான்றிதழ் வழங்குவது நிறுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அவசர தேவை உள்ளவர்கள் பணியகத் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கு-9)

# ஹற்றன் நஷனல் வங்கியின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஏப்.16

ஊரடங்குச் சட்டத்தால் முடக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மாவட்ட மக்களின் வங்கிச் சேவைகளை இலகுபடுத்த ஹற்றன் நஷனல் வங்கியால் நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இன்று வியாழக்கிழமை அச்சுவேலியில் குறிக்கப்பட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரங்களில் நடமாடும் சேவை நடத்தப்படும்.

இடைக்காடு சந்தியில் காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரை, ஆவரங்கால் சந்தியில் காலை 9.15 மணி தொடக்கம் 11.15 மணிவரை, புத்தூர்ச் சந்தியில் முற்பகல் 11.30 மணி தொடக்கம்1.30 மணி வரை, நீர்வேலிச் சந்தியில் பிற்பகல் 1.45 மணிதொடக்கம் 2.45 மணி வரை, அச்செழுச் சந்தியில் (இராச வீதி)பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணி வரை, நிலாவரைச்சந்தியில் பிற்பகல் 4.15 மணி தொடக்கம் 5.15 மணி வரை வங்கிச் சேவை நடத்தப்படும். (க)

# பொலிஸார், மாபியாக்களை வைத்து ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல்

## மட்டு.தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு கடிதம்

மட்டக்களப்பு, ஏப்.16

பொலிஸார், மற்றும் மாபியாக்களைப் பயன்படுத்தி, ஊடகவியலாளர்களை மிரட்டும் நடவடிக்கையில் மட்டு. மாவட்ட அரச அதிகாரிகள், ஈடுபட்டுள்ளனர். இந்தச் செயற்பாடுகளை அவர்கள் நிறுத்த வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 12ஆம் திகதி ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலகத்தால், வழங்கப்பட்ட அரிசி மூடைகளில் காலாவதியான திகதி இருப்பதாக எமது ஊடகவியலாளர் ஒருவருக்குத் தகவல் கிடைத்தது. அது குறித்து மக்கள் கருத்துக்களைப் பதிவு செய்ததன் பின்னர் , ஏறாவூர் பற்று பிரதேச செயலாளரிடம் குறிப்பிட்ட ஊடகவியலாளர் கருத்து கேட்டபோது " இது குறித்து எனக்கு தெரியாது. நீங்கள் மாவட்ட செயலரிடம் தான் கேட்க வேண்டும்" என்று கூறினார். அதற்கமைய குறித்த விடயம் தொடர்பாக மாவட்டச் செயலரிடம் நேரில் சென்று ஊடகவியலாளர் பேசினார். அவர் குறித்த செய்தி தொடர்பாக ஊடகத்திற்கு கருத்து கூற மறுத்தார்.அதன் பின்னர் குறித்த ஊடகம் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர், இவ்வாறான அரிசி மூடைகள் மாவட்டம் பூராகவும் வழங்கப்பட்டுள்ளன எனவும் இது இரண்டு நாள்களுக்கு முன்னரே பொதி செய்யப்பட்ட புதிய அரிசி எனவும் கருத்து கூறியதன் பின்னரே குறித்த செய்தியை குறிப்பிட்ட ஊடக நிறுவனம் வெளியிட்டுள்ளது.

ஆனால் அந்தச் செய்தி வெளியாகியதன் பின்னர் மாவட்டச் செயலர் உட்பட ஏறாவூர் பற்று பிரதேச செயலாளரின் பினாமிகள் சிலர் ஊடகவியலாளரை அச்சுறுத்தியதுடன் செய்தி சேகரித்து அனுப்பிய ஊடகவியலாளர் குறித்து அவரது ஊடக நிறுவனத்திடம் பல அவதூறான பொய்யான சேறு பூசும் கருத்துக்களைக் கூறியுள்ளனர். இதைவிட செங்கலடி பிரதேச ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர் ஒருவர் ஊடகவியலாளர்கள் வெளிக்கொண்டு வரும் செய்திகளை பொய் என்று கூறி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் மக்களிடம் சென்று அவர்களை அச்சுறுத்தி நீங்கள் ஏன் அப்படி சொன்னீர்கள்? நீங்கள் ஏன் மீடியாவுக்கு கொடுத்தீர்கள்? உங்களுக்கு சமுர்த்தியை வெட்டுவார்கள், அரசாங்க உதவி கிடைக்காது என்று கூறி அவர்களது கருத்தை வாபஸ் பெறச் சொல்லி அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இவருக்கு ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் ஆதரவு வழங்கி வருகிறார். மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக அதிகாரிகளின் அசமந்தப் போக்கு மற்றும் ஊழல் குறித்து செய்திகள் வெளிவரும் போது அது குறித்து கவனம் செலுத்தாத மாவட்ட நிர்வாகம் அந்தச் செய்திகளை பிரசுரிக்கும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது சேறு பூசுவதும் பாதுகாப்புத் தரப்பினரை வைத்து அச்சுறுத்துவதுமாக உள்ளது. ஊடகவியலாளர்கள் மீது சேறு பூசுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில பிரதேச செயலாளர்கள் அரசாங்கம் வழங்கியுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஊடகவியலாளர்களைப் பல்வேறு வகையில் அச்சுறுத்தி வருகின்றனர். இது குறித்து புதிய அரசாங்கம் கண்டு கொள்ளாமல் உள்ளமை இலங்கையின் ஊடக சுதந்திரத்தை மீண்டும் கேள்விக்குறியாக்கியுள்ளது என்றுள்ளது. (ப-150)

# பாகுபாடுகளின்றி நிவாரணம் வழங்குபவர்களுக்கே அனுமதி

## மன்னார் மாவட்டச் செயலர் தீர்க்கம்



**மன்னார், ஏப்.16**

**நிறுவனங்களால் மக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள் எல்லா மக்களுக்கும் பாரபட்சமில்லாத வகையில் சமய, மொழி, இனம், கட்சி பார்க்காது வழங்கப்பட வேண்டும். இவ்வாறு பாகுபாடின்றி வழங்கப்படுபவர்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்குவதற்கான அனுமதி வழங்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டத்தில் சில அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் தளம்பல் நிலை காணப்பட்டு வருகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்ட நிலையில், நேற்று மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் மன்னார் மாவட்டசெயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போதே இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டத்தில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விலைகளில் பொருள்கள் விற்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன. இதையிட்டுத் தற்பொழுது தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக நிவாரணப் பணிகளுக்கு விற்கப்படும் பொருள்களாக வெள்ளைச் சம்பா, வெள்ளை நாடு போன்றன மொத்த விலைக்கு தலா 95 ரூபாவுக்கும், சில்லறை விலைக்கு தலா 100 ரூபாவுக்கும் விற்பனைச் செய்யத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிவப்பு கீரிச் சம்பா 110 ரூபாவுக்கும், வெள்ளைக் கீரிச் சம்பா 115 ரூபாவுக்கும் மொத்தவிலைகளுக்கு விற்கப்படும். சில்லறை விலைக்கு சிவப்பு கீரிச் சம்பா 115 ரூபாவுக்கும் வெள்ளை கீரிச் சம்பா 120 ரூபாவுக்கும் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மக்களின் அன்றாடத் தேவைகளில் ஒன்றாக அரிசி இருப்பதால் அதிகரித்த விலையில் விற்பனை செய்யக் கூடாது என்று கட்டளையிடப்பட்டுள்ளது.

நிவாரணமாக வழங்கப்படும் பொருள்களாக அத்தியாவசியப் பொருள்களையே வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. உருளைக் கிழங்கு, வெங்காயம் என்பவற்றை மக்கள் விரும்பினால் மட்டும் வழங்கலாம் இதைவிடுத்து அரிசி, மா, சீனி, சோயா, சோப் மற்றும் தேயிலை போன்றன பொருள்களில் குறிக்கப்பட்டுள்ள விலைகளுக்கே வழங்கப்பட வேண்டும்.

மா 81.40 சதத்துக்கு மொத்த விலையாகவும் சில்லறை விலைக்கு 86 ரூபாவுக்கும் விற்கப்பட வேண்டும். சீனியின் உச்சக்கட்ட சில்லறை விலை 125 ரூபாவாகவும், சோயா ஒரு கிலோ 90 ரூபாவாகவும் இருக்க வேண்டும். நிவாரணப் பொருட்களை பெரும்பாலும் சதொசா மற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவே வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளன. நிறுவனங்களால் மக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள் எல்லா மக்களுக்கும் பாரபட்சமில்லாது வகையில் அதாவது சமய, மொழி, இனம் கட்சி வழங்கப்பட வேண்டும். இவ்வாறு சீராக வழங்கப்படுபவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் - என்றார். (ப-60)

# நிறை குறைந்தால் முறையிடுங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.16

பொதுமக்களால் கொள்வனவு செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்களின் நிறையை குறைத்து விற்பனை செய்பவர்கள் தொடர்பாக பொதுமக்கள் பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கலாம். அவ்வாறு விற்பனையில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெல்லிப்பழைப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது

தற்போதைய இக்கட்டான நிலைமையில் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் பல வியாபார நிறுவனங்கள் நிறைகளைக் குறைத்து பொதுமக்களுக்கு விற்பனை செய்வதாக, பொதுமக்களிடம் இருந்து பெருமளவு முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கின்றன. இதனால் அவ்வாறானவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக அவ்வாறான வியாபார நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பற்றியதான விவரங்களை உடனடியாக எமது பிரதேச செயலாளருக்கு அறிவித்தருமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுமக்களது முறைப்பாடுகளின் அடிப்படையில் வியாபார நிறுவனங்களைச் சோதனை செய்யும் நடைமுறை நாளை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் நிறை குறைவாக விற்பனை செய்யும் வியாபார நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை சகல பொது மக்களுக்கும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ஐ)

# அரியாலைவாசிக்கு கொரோனா தீவிரம்

யாழ்ப்பாணம், ஏப். 16

காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் மையத்தில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானதாக உறுதிப்படுத்தப்பட்ட அரியாலைவாசிக்கு கொரோனா வைரஸ் தொற்று மிக அதிகமாக இருப்பதாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் மையத்திலிருந்த, சுவிஸ் மதபோதகருடன் மிக நெருக்கமாக 4 நாள்கள் தொடர்ச்சியாகத் தொடர்பிலிருந்த அரியாலைவாசிக்கு கடந்த மூன்றாம் திகதி மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவருக்கு ஏனையோருடன் ஒப்பிடுகையில் வைரஸ் தொற்று மிக அதிகமாக உள்ளதாக, மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ,5)

# பாடசாலை சேவை வாகனங்கள் ஓட்டோக்களுக்கும் 5,000 ரூபா

## அரசு அனுமதி என்கின்றார் அமரவீர



கொழும்பு, ஏப். 16

முச்சக்கரவண்டிச் சாரதிகள் மற்றும் பாடசாலைகளுக்கான மாணவர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களின் சாரதிகளுக்கும் 5ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகளை வழங்குமாறு முன்னரே ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அதற்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் மற்றும் அங்கவீனமானோருக்கு 5ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே 5 இலட்சத்து 59 ஆயிரத்து 109 முதியோருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 74 ஆயிரத்து 154 பேருக்கு கொடுப்பனவு வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 14ஆயிரத்து 195 அங்கவீனமானோருக்கும் 5 ஆயிரத்து 884 சிறுநீரக நோயாளர்களுக்கும் கொடுப்பனவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)




# இலங்கையர்களை நாட்டுக்கு மீண்டும் அழைத்துவரத் திட்டம்

## முன்னாள் எம்.பி நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.16

இலங்கைக்கு வரமுடியாமல் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான விசேட வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

"உலகையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி இலட்சக் கணக்கான உயிர்களைக் காவு கொண்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, நாடுகளுக்கிடையிலான விமான சேவைகள் அனைத்தும் முடங்கியுள்ளன. இதனால் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் இலங்கைக்கு மீண்டும் வரமுடியாது அவதிக்குள்ளாகியுள்ளனர். எனினும் அவ்வாறான இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான விசேட வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பில் ஜனாதிபதி செயலணியுடன் நீண்ட கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், முதலில் எந்த நாட்டிலுள்ளவர்களை அழைத்து வருவது என்பது குறித்து ஆராயப்பட்டுவருகிறது" என்று நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார். (ப-114)



# அரசுக்கு கிடைத்த அட்சய பாத்திரம்

எஸ்.ராஜ்குமார்

தற்போதைய அரசு கொரோனாவைக் காரணமாகக் காட்டி தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முழுவீச்சில் முன்னெடுத்து வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் இவைகள் அனைத்தும் கொரோனாத் தடுப்பு என்ற பெயரில் மேற்கொள்ளப்படுவதால் அதனைத் தடுக்கவோ விமர்சிக்கவோ முறையிடவோ முடியாமல் தவித்துப் போயிருக்கிறார்கள் எதிர்த் தரப்பினரும் தேர்தல்கள் ஆணைக்குழுவினரும்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களை சுகாதாரத் திணைக்களத்தில் இணைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இந்தப் பிரச்சார நடவடிக்கைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றன. ஏற்கனவே கோத்தாபய, தனது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம், வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் பேருக்கு நியமனம் என்று ஏகப்பட்ட வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். அவர் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் இந்த நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் அவை ஆமை வேகத்திலேயே நடைபெற்றன. இடையில் மார்ச் 2 இல் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளை கோத்தாபயவால் நிறைவேற்ற முடியாமல் போனது. ஆகக் குறைந்தது இந்தப் பட்டதாரிகளில் 50 ஆயிரம் பேருக்காவது நியமனங்களை வழங்கி அடுத்த பொதுத் தேர்த்லில் தமது பெயரை 'ரிப்பேராகி' விடாமல் காத்துக்கொள்ள ராஜபக்ஷக்கள் தரப்பு முயன்றது.

இதற்காக கடந்த பெப்ரவரி 7 ஆம் திகதி பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. விண்ணப்ப முடிவுத் திகதி பெப்ரவரி 14 என்று முதலிலும், பின்னர் பெப்ரவரி 20 என்றும் அறிவிக்கப்பட்டது. இதன் பின்னர் மார்ச் 2 இல் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் இந்த நியமனங்கள் தொடர்பான வேலைகள் குதிரை வேகம் பிடித்தன. கால அவகாசம் குறைவான காரணத்தினால் நேர்முகத் தேர்வுகள் இல்லாமல் நேரடியாக நியமனக் கடிதங்கள் வழங்க தீர்மானிக்கப்பட்டன. அதனடிப்படையில் 45 ஆயிரத்து 586 பேருக்கு நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதில் கடிதம் கிடைத்த மூன்று நாட்களுக்குள் நியமன நிலையத்துக்கு அறிவிக்க வேண்டுமென்றும் ஏழு நாட்களுக்குள் பதவியில் இணைய வேண்டுமென்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. ஒரு வருடம் நியமன இடங்களில் பயிற்சி, அதுவரை 20ஆயிரம் ரூபா சம்பளம். பின்னர் 2021 மார்ச் முதல் நிரந்தர நியமனம், ஓய்வூதியத்துடன் கூடிய சம்பளம் என்று அறிவுறுத்தப்பட்டது. இந்த அடிப்படையில் தீயாக வேலைசெய்து பெப்ரவரி 28 இல் நியமனக் கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டன. நியமனதாரிகளுக்கு கடிதங்கள் விரைவிலே கிடைக்க வேண்டுமென்பதற்காக 'கடுகதித் தபால்' மூலம் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. மார்ச் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தபால் ஊழியர்களுக்கான லீவுகள் ரத்துச்செய்யப்பட்டு, வேலை நாளாக அறிவிக்கப்பட்டு நியமனக் கடித விநியோகங்கள் துரிதப்படுத்தப்பட்டன. ஆனால் எங்கு எப்படி சறுக்கியதோ தெரியவில்லை மார்ச் 1 இல் சிலருக்கு மட்டுமே கடிதங்கள் கிடைத்தன. ஏனையோருக்கு காலங்கடந்தே கடிதங்கள் கிடைத்தன. ஆனால் மார்ச் 2 ஆம் திகதியுடன் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது.

எனவே அதன்பின்னர் நியமனங்களை வழங்குவது தேர்தல்கள் சட்டங்களின் படி பிழையானது என்ற ரீதியில் தேர்தல்கள் ஆணைக்குழு இந்த நியமனங்களுக்கு தடை போட்டது. ஆனாலும் அதனைச் செவிமடுக்காது அரச தரப்பு நியமனங்களை வழங்க முயற்சிகளை மேற்கொண்டது. அதனையடுத்து தேர்தல்கள் ஆணைக்குழு கடிதமொன்றைக் கறாராக அனுப்பி நியமனங்களை உடனடியாக நிறுத்தும்படி உத்தரவிட்டது. இந்த நியமனங்களை இரண்டு மாதங்களுக்கு தள்ளிவைக்க ஆணையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரசுக்கு பட்டதாரி நியமனங்களை வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. ஜனாதிபதி பதவி ஏற்ற ஆரம்ப நாட்களில் சும்மா நாட்களைக் கழித்துவிட்டு நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான இறுதி நாட்களில் இந்த நியமனங்களை வழங்க எடுத்த முயற்சி பலதரப்பாலும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டது.

ரணில் அரசு கொழுக்கட்டை என்றால், ராஜபக்ஷக்களின் அரசு மோதகமாக இருந்ததே தவிர எதிர்பார்த்த மாற்றம் எதுவும் நிகழவில்லை. இந்த நிலையில் மக்களை எப்படி தாஜா பண்ணுவது என்று ராஜபக் க்கள் தலையைப் பிய்த்துக்கொண்டிருந்த நேரத்திலே தான் அட்சய பாத்திரமாக வந்து கிடைத்தது கொரோனா.

மேலும் பட்டதாரிகள் தரப்பிலும் தாம் மீண்டும் ஏமாற்றப்பட்டு விட்டோமோ என்ற குழப்ப நிலை ஏற்பட்டது. இவை தேர்தலை எதிர்நோக்கியிருந்த அரசுக்குப் பெரும் பின்னடைவாகவும் எதிர்க்கட்சிகளின் வாய்க்கு அவலாகவும் ஆகிப் போனது. இந்த நியமனங்களை வழங்குவதற்கு பல தடவைகள் அரச பிரதிநிதிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் பேசிப்பார்த்தார்கள் . ஜனாதிபதி கொஞ்சம் சீறியும் பார்த்தார். ஆனால் ம்கூம்... , பருப்பு வேகவேயில்லை. இதனால் குமைந்து போயிருந்த அரசு நியமனம் பெற்ற பட்டதாரிகளைப் பார்த்து, "இரண்டு மாதம் வீட்டிலேயிருந்து இருபதாயிரம் ரூபா சம்பளத்தை மாதாந்தம் பெறுங்கள். தேர்தல் முடிந்து நாம் ஆட்சிக்கு வந்ததும் உங்களுக்கு நியமனம் வழங்குவோம்" என்று சொல்லி விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லையே என்று தம்பட்டம் அடித்த கதையாக நிலைமையை சமாளித்தார் மஹிந்த. ஆனால் தேர்தல் ஆணைக்குழுவோ விடுவதாக இல்லை.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்ட நியமனங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கக் கூடாது என்று தடை போட்டது. இது கோத்தா அரசுக்கு இன்னமும் சங்கடமாகிப்போனது. கொடுத்த வாக்குறுதிகளிலே நிறைவேற்றப்பட்டதோ இந்த 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' தான். அதுவும் இப்படி ஊத்திக் கொண்டால் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்களிடம் என்ன முகத்துடன் போய் வாக்குக் கேட்பது என்ற நிலை. எனவே பட்டதாரிகளை சுகாதாரத் தொண்டர்களாக்கி கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது பின்னர் அதற்கு ஊதியமாக இந்த 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகளை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கும் நந்தியாக வந்து குந்திக் கொண்டு 'நோ' சொல்லிவிட்டது. இப்போதும் ஏதாவது டகால்டி வேலை பார்த்து பட்டதாரிகளை எங்காவது ஒரு பதவியில் தூக்கிப்போடவும் அல்லது ஏதாவது ஒரு சாட்டு வைத்து கொடுப்பனவை தூக்கிக் கொடுக்கவும் சாக்குப்போக்குக்களை தேடி அலைந்து கொண்டிருக்கிறது அரச தரப்பு.

மேலும் ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் பல இன்னமும் நிறைவேற்றப்பட வில்லை; அதேபோல் ராஜபக் ஷக்களின் கையில் ஆட்சி சென்றால் கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்த்த பல விடயங்கள் கிடைக்கவேயில்லை.

பொருட்களின் விலைகள் இறங்கவில்லை, வேலைவாய்ப்புக்கள் பல வழங்கப்படவில்லை,தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் வழங்கப்படவில்லை, அரச ஊழியர்களின் சம்பளங்களும் அதிகரிக்கப்படவில்லை, நாட்டின் பொருளாதாரம் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. ராஜபக்ஷக்களின் கையில் ஆட்சிசென்றால் பாலும் தேனும் ஓடும் என்று நினைத்து வாக்களித்த சிங்கள பௌத்தர்கள் மத்தியிலும் ஏமாற்றமே மிஞ்சியது. இந்த அரசும் பழைய பல்லவிகளையே பாடத் தொடங்கியது. ஏற்கனவே முன்னர் மஹிந்த ஆட்சியில் இருந்தபோது வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் திண்டாடுகிறோம் என்று ரணில் அரசு சொன்னது. இந்த அரசும் ஆட்சிக்கு வந்தவுடன் ரணில் அரசு வாங்கிக் குவித்த கடன்களுக்கு வட்டி கட்ட முடியவில்லை என்று பழைய பாட்டையே கொஞ்சம் மாற்றிப் பாடியது. ரணில் அரசு கொழுக்கட்டை என்றால், ராஜபக் ஷக்களின் அரசு மோதகமாக இருந்ததே தவிர எதிர்பார்த்த மாற்றம் எதுவும் நிகழவில்லை. இந்த நிலையில் மக்களை எப்படி தாஜா பண்ணுவது என்று ராஜபக்ஷக்கள் தலையைப் பிய்த்துக்கொண்டிருந்த நேரத்திலே தான் அட்சய பாத்திரமாக வந்து கிடைத்தது கொரோனா.

இன்று ஆளும் கட்சியினர் கொரோனாவை காரணம் காட்டி தமது நிதியோ தமது கட்சியின் நிதியோ இன்றி தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியும், தேர்தல் கால சலுகைகளை அள்ளி வழங்கியும் வருகின்றனர். தொடர் ஊரடங்கைக் காரணம் காட்டி வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களின் நிதியிலிருந்து ஏகப்பட்ட சலுகைகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன. பருப்பு, முட்டை, ரின்மீன் என்பனவற்றின் விலைகள் அதன் இறக்குமதியாளர்கள் உற்பத்தியாளர்கள் ஆகியோரின் சம்மதம் இன்றியே குறைக்கப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இதனால் அவர்கள் நஷ்டத்தை எதிர்நோக்கியிருப்பதாகத் தெரிவித்து வருகின்றனர்.

இது தவிர சமுர்த்திக்காரர்களுக்கும், வயோதிபர்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும், விவசாயிகள், அங்கவீனமுற்றோர், சிறுநீரக நோயாளிகள் என்று பலதரப்பட்டவர்களுக்கும் நிவாரணங்களும் சலுகைகளும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கும் அரச நிதியே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவை தொடர் ஊரடங்கு மற்றும் கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் வழங்கப்படவேண்டியவைதானாயினும் இதனை அரசுத் தரப்பு தேர்தல் பிரசார நடவடிக்கையாகவே மேற்கொண்டு வருவதுதான் தவறானதாக இருக்கிறது. தேர்தல் முடிந்த பின் இவ்வாறான இக்கட்டான நிலை ஏற்பட்டிருந்தால் இதே அரசினால் இவ்வளவு சலுகைகள் வழங்கப்பட்டிருக்குமா என்ற கேள்வியும் எதிர்க் கட்சிகள் தரப்பினால் முன்வைக்கப்பட்டா லும் எல்லாவற்றுக்கும் முன்னால் கொரோனா நிற்பதால் அரசின் அனைத்து நடவடிக்கைகளையும் அநியாயத்துக்கு ஆதரிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன எதிர்கட்சிகள்.

(அடுத்த பக்கம் பார்க்க)

## கட்டுரை

(தொடர்ச்சி)



மேலும் இவ்வாறாக அரச நிதியில் வழங்கப்படும் நிவாரணங்களை ஆளும் கட்சிக்காரர்கள் தாமே போய் நின்று தமது கட்சி சின்னத்தைக் காட்டி அந்த நிவாரண உதவிகள் தமது சொந்த நிதியிலேயே வழங்கப்படுவது போல் 'பாவ்லா' காட்டுகிறார்கள். இது பற்றிக் கிடைத்த குற்றச்சாட்டுக்களை அடுத்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சமன் ரட்நாயக்க இவ்வாறான செயல்பாடுகளுக்குத் தடைவிதித்து மாவட்ட செயலர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார். ஆனாலும் இவை தொடர்வதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய குற்றம்சாட்டியிருக்கிறார்.

மேலும் ஊரடங்கு உத்தரவு கடுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த கல்வி அமைச்சா டலஸ் அழகப்பெரும, பிரதி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோர் மாத்தளை அக்குரஸ்ஸவிலும், சுதர்ஸனி பெர்னான் டோபுள்ளை கம்பஹா பகுதியிலும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தியதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

இது தவிர தற்போதய நெருக்கடியான நிலையில் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மக்களுக்கு ஏகப்பட்ட நிவாரண உதவிகள் தேவைப்படுகின்றன. இதனை வழங்க பல்வேறு கட்சிக்காரர்களும் முன்வரும் நிலையில், ஊரடங்கையும் தேர்தல் சட்டங்களையும் காரணமாகக்காட்டி அவைகளைத் தடுத்துவிட்டு தாமே அனைத்து நிவாரணங்களையும் வழங்குவோம் என அரச தரப்பு அடம் பிடித்து வருவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

இது மட்டுமல்லாது உள்ளூராட்சி சபைகளில் தேங்கிப் போயிருக்கும் பல கோடி ரூபா நிதியிலே கொஞ்சத்தை எடுத்து நிவாரணப் பணிகளுக்கு செலவிட எதிர்க்கட்சிகள் முயன்றபோது அதற்கும் தமது உள்ளூராட்சிப் பிரதிநிதிகள் மூலமும் ஆளுநர்கள் மூலமும் தடங்கல்களை ஏற்படுத்தி ' எங்கும் நாமே எதிலும் நாமே' என்று மலிவான தேர்தல் பிரசாரங்களில் அரசு ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. இதற்கிடையில் எல்லோரின் பார்வையும் கொரோனாப் பக்கம் திரும்பியிருக்க சத்தம் சந்தடியின்றி மிருசுவில் கொலையாளியான கோப்ரல் ரத்னாயக்கவை பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்திருக்கிறார் ஜனாதிபதி;

இவ்வாறாக கொரோனாவைச் சாட்டாக வைத்துக் கொண்டு அரச தரப்பினர் மேற்கொள்ளும் அடாத்துக்களை தடுக்க அல்லது தட்டிக் கேட்கப் போனால் கொரோனாவைத் தடுக்கும் தமது முயற்சிகளுக்கு தடையாக இருக்கிறார்கள் என்ற பழிச் சொல் தம்மேல் சுமத்தப்பட்டு விடுமோ என்ற பயத்தில் அனைவரும் பார்வையாளர்களாகவும் ஆதரவாளர்களாகவும் இருக்க வேண்டிய தர்மசங்கடமான நிலையிலேயே இருக்க வேண்டியிருக்கிறது. மற்றவர்களுக்கு கொள்ளி வைத்த கொரோனா, கோத்தா அரசுக்கு மட்டும் கொட்டிக் கொடுத்திருக்கிறது.

---

# கொரோனா தொடர்பில் விழிப்புணர்வுப் போட்டிகள்

### 22க்கு முன் ஆக்கங்களை அனுப்புக

கொடிகாமம், ஏப். 16

சாவகச்சேரி பிரதேச இளைஞர் சபை நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளுக்கான இளைஞர் வலையமைப்பு கொரோனா தொடர்பான விழிப்புணர்வுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

ஒளிப்படப் போட்டி, சித்திரப்போட்டி, கவிதைப் போட்டி, பாட்டுப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கொரோனாவும் மக்களின் வாழ்க்கை முறையும், கொரோனாவும் தனிமனித சுகாதாரமும், கொரோனா விழிப்புணர்வு , கொரோனா விடுமுறையைப் பயனுள்ளதாக கழித்தல் ஆகிய தலைப்புகளில் இந்தப் போட்டிகள்நடத்தப்படவுள்ளன.

போட்டிகளுக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை. விரும்பிய போட்டிகளில் கலந்துகொள்ள முடியும். பங்கு கொள்ளும் அனைவருக்கும் விழிப்புணர்வுச் சான்றிதழ் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 0771886195, 0775670039 ஆகிய அலைபேசி இலக்கங்களின் வைபர், வட்சப் இலக்கங்களுக்கு ஆக்கங்களை எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அனுப்பவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-159)



# பயிர்களைத் துவம்சமாக்கிய 50 மாடுகள் மடக்கப்பட்டன

மட்டக்களப்பு, ஏப். 16

வாழைச்சேனையில் வாகனேரி முள்ளிவட்டவான் பகுதியில் விவசாயப் பயிர்களைத் துவம்சம் செய்த 50 மாடுகளை விவசாயிகள் பிடித்து கட்டி வைத்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

அங்கு 40 க்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாயப்பயிர்களை மாடுகள் துவம்சம் செய்தன என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

பின்னர் கிராம அலுவலர் விவசாயிகள் மற்றும் மாடுகளின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி இனியும் இத்தகைய பிரச்சினைகள் வராதவாறு பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்படும் என்று தெரிவித்ததையடுத்து மாடுகள் விடுவிக்கப்பட்டன. (த-150)

# வறிய மக்களுக்கு கடல் உணவுகள்



முல்லைத்தீவு,ஏப்.16

இராணுவத்தினரும் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வறிய மக்களுக்கு கடல் உணவுகள் வழங்கும் நடவடிக்கையை இன்று ஆரம்பித்துள்ளனர்.

முதற் கட்டமாக 460 குடும்பங்களுக்கு தலா 1 தொடக்கம் 2 கிலோ நிறையுடைய கடல் உணவுகள் வழங்கப்பட்டன.

இதில் இராணுவ அதிகாரிகள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர், பொதுச்சுகாதாரபரிசோதகர், பொலிஸார் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். முதற்கட்டமாக முள்ளியவளை, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு உள்ளிட்ட இடங்களில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இத்திட்டத்துக்கான கடல் உணவுகளை முல்லைத்தீவு கரைவலை உரிமையாளர்கள் இலவசமாக வழங்கியிருந்தனர். (ஐ-222)



# சிவபூமி ஆச்சிரமத்தில் புத்தாண்டு வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டுப் பூசை மற்றும் பொங்கல் வழிபாடுகள் எளிமையான முறையில் நடைபெற்றன.

சார்வரி வருடம் உதயமான இரவு 07.26 மணியளவில் சிவபூமி ஆச்சிரமத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெருமான், விநாயகப் பெருமான், ஈழத்து, இந்தியச் சித்தர்களின் உருவப்படங்களுக்குத் தீபாராதனை, பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

தற்போது தொடர் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமையால், ஆச்சிரமத்தில் இடம்பெற்ற புத்தாண்டு மற்றும் பொங்கல் வழிபாடுகளில் ஒரு சிலர் மாத்திரமே கலந்து கொண்டனர். ஆச்சிரம முன்றலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள விநாயகர் சந்நிதான முன்றிலில் பொங்கல் வழிபாடுகளும் இடம்பெற்றன. (க)

# 7 ஆயிரம் கிலோ மரக்கறிகள் பயனற்று அழுகிப்போயின

திருகோணமலை ஏப் 16

திருகோணமலை கந்தளாய்ப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் கந்தளாய்ப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்வதற்காக கொண்டு செல்லப்பட்ட ஏழாயிரம் கிலோ மரக்கறி வகைகள் அழுகி வீணாகிப் போயின. கந்தளாய் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட இவ் வேலைத்திட்டம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையாலே மரக்கறிகள் அழுகியதாகத் தெரிவிக்கப்படுகிறது. கரட், கோவா, லீக்ஸ், பூசணிக்காய், மற்றும் போஞ்சி போன்ற ஏழாயிரம் கிலோவுக்கும் மேற்பட்ட மரக்கறி வகைகள் இவ்வாறு அழுகியமையால், சுமார் நான்கு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதி வீண் விரயமாக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது . (ப-114)





# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தொடர் ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள கட்டுவனைச் சேர்ந்த 75 குடும்பங்களுக்கு ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பினரால் உலருணவுப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன. (ம)





ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தித்துறை வியாபாரிமூலை பகுதியில் உள்ள மக்களின் உணவுத்தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில், வியாபாரிமூலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் புலம்பெயர் வாழும் மக்களின் நிதியுதவியில் உலர் உணவுப் பொருள்கள், மரக்கறிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம)

கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் அனுசரணையுடன், தோராங்கண்டல், மங்கைநகர் கிராமங்களில் கொரோனா தொற்று நோய் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. நாளாந்த உழைப்பை நம்பி வாழும் 33 குடும்பங்களுக்கே இந்த உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-222)



ஊரடங்கு உத்தரவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள திருகோணமலை - சோலையடிப் பகுதியைச் சேர்ந்த 42 குடும்பங்களுக்கு தன்னார்வலர்கள் சிலரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



திருகோணமலை நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு, தற்போது நாட்டில் நிலவுகின்ற அசாதாரண நிலை காரணமாக குறைந்த விலைகளில் மரக்கறிகளை விநியோகம் செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. திருகோணமலை நகர சபை, திருகோணமலை மாவட்ட வர்த்தக சம்மேளனம் மற்றும் சிவில் அமைப்புகள் ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தியுள்ளன.






இலங்கை தமிழரசுக்கட்சி உறுப்பினர் இளங்கலைஞர் ஆ.முல்லைதிவ்யன் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள பொலிகண்டிவாழ் 30 குழந்தைகளுக்கு பால்மா பைக்கற்றுக்களையும், 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளையும் வழங்கியுள்ளார். (ம-159)



வேலணை விடிவெள்ளி அமைப்பினால் புலம்பெயர் தேசத்து உறவுகளின் நிதி அனுசரணையில் வேலணைப் பிரதேசத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் உலர் உணவுகளை வழங்கும் செயற்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வேலணை மேற்கு கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் 296 குடும்பங்களுக்கு அவர்களின் வீடுதேடிச் சென்று உலர் உணவுகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. (ம-7)



அமெரிக்காவில் வசிக்கும் பொறியியலாளர் ஞானச்சந்திரமூர்த்தி சின்னையாவின் நிதிப்பங்களிப்பில் வழக்கம்பரை அம்பாள் அறக்கட்டளையினரால் 100 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)



நெதர்லாந்தைச் சேர்ந்த சுசீலன் பாலனின் சுசீலன் பௌண்டேசன் நிறுவனமானது தொடர்சியாக இலங்கையில் பல்வேறுபட்ட உதவித்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. அதன் வரிசையில் ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள கேப்பாபிலவு மற்றும் மாமூலைப் பிரதேசங்களில் வாழும் 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளது. (ம-222)



தென்மராட்சி கலைமன்றத்தினர் ஊரடங்குச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட கலைமன்ற கலாசார மண்டபத்தை சூழவுள்ள தெரிவுசெய்யப்பட்ட 72 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களை அண்மையில் வழங்கினர். (ம-9)

# கொரோனாவின் புதிய அறிகுறி

கொழும்பு,ஏப்.16
கொரோனாத் தொற்றின் புதிய அறிகுறியாக கால்களில் கொப்புளங்கள் ஏற்படும் என்று ஆஸ்திரேலிய மெல்பன் வெஸ்டன் மருத்துவமனையின் நரம்பியல் பிரிவின் பிரதானியாக பணியாற்றும் இலங்கையின் மருத்துவ பேராசியரியர் திஸ்ஸ விஜேரத்ன தெரிவித்துள்ளார்.
ஸ்பெய்னில் கால்கள் தொடர்பான நிபுணர்களின் தேசியக் கூட்டத்தில் இது தொடர்பான முதலாவது அறிக்கை வெளியிடப்பட்டது.
சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் முதியவர்களுக்கும், கொவிட்19 தொற்று அறிகுறியாக கொப்புளங்கள், கொரோனா நோயாளர்களிடம் அவதானிக்க முடியும்.
இது எண்ணிக்கை அடிப்படையில் ஒவ்வொரு நோயாளிகளுக்கு உள்ளதாகக் குறிப்பிடப்பட்டதே தவிர, விகிதாசார அடிப்படையிலான அறிகுறிகள் என்று ஸ்பெய்ன் நிபுணர்களால் வெளிப்படுத்தவில்லை என்று பேராசியரியர் திஸ்ஸ விஜேரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (க)

# கொரோனாப் பரிசோதனைக்கு பொறிமுறையை உருவாக்கவும்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 16**
**கொரோனாத் தொற்று இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் ஒருவருக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனை தொடர்பில் கால அளவு கொண்ட அட்டவணையை வெளியிடுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளது.**

நாட்டில் கொரோனாத் தொற்று உடையவர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்ட பலர் சிகிச்சையில் இருந்து வெளியேறிய பின்னர் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆகவேதான் மூன்று முறை தொற்று உள்ளவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவருக்குப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.
ஆகவே பரிசோதனை தொடர்பாக கால எல்லை கொண்ட அட்டவணை ஒன்றை வெளியிட்டு சகல மாகாணங்களும் குறித்த முறையில் பரிசோதனை மேற்கொள்வதன் மூலம், அதிகளவான தொற்று சந்தேகம் உள்ளவர்களுக்கு பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். தொற்று இல்லாதவர்களும் நீண்ட காலம் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டிய தேவை ஏற்படாது.
அதாவது தொற்று உள்ளவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவருக்கு முதலாவது பரிசோதனை முடிவடைந்து அதில் தொற்று இல்லை எனத் தெரியவரும்போது, எத்தனை நாள்களின் பின்னர் அவருக்கு இரண்டாம் மூன்றாம் பரிசோதனை செய்ய வேண்டும் என்ற காலப்பகுதி வெளியிடப்பட வேண்டும்.
அடுத்ததாக முதல் தடவை ஒரு வகையான பரிசோதனை செய்து தொற்று இல்லை என தெரிவிக்கும் நபருக்கு இரண்டாம் மூன்றாம் பரிசோதனையாக வேறுபட்ட பரிசோதனை செய்யப்பட வேண்டும்.
ஆகவே இவ்வாறு பரிசோதனை செய்யும் காலம், அளவுகள், பரிசோதனை முறைகளை சகல மாகாணங்களும் ஒரே முறையில் பின்பற்றும் வகையில் வெளியிட வேண்டும் என்று மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது. (து-7)

# கிளிநொச்சி மாவட்டத்தவருக்கு கொரோனா இதுவரை இல்லை

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 16
கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை எவருக்குமே கொரோனா தொற்று ஏற்படவில்லை. முழங்காவில் நாச்சிக்குடா கடற்படை தனிமைப்படுத்தல் நிலையத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் எவருமே கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று கிளிநொச்சி மாவட்டச்செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
ஜாஎல, மட்டக்குளி, ராகம பகுதிகளைச் சேர்ந்த 32 பேர் கிளிநொச்சி முழங்காவில் நாச்சிக்குடா கடற்படை தனிமைப்படுத்தல் முகாமுக்கு கடந்த 13ஆம் திகதி அழைத்துவரப்பட்டிருந்தனர். இவர்களில் ஆறுபேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.
இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக தவறான செய்தி மக்கள் மத்தியில் பரப்பப்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள மக்களிடம் அச்சம் ஏற்பட்டுள்ளது. இது பற்றிக் கேட்ட போது, மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரைக்கும் எவருக்குமே கொரோனாத் தொற்று ஏற்படவில்லை. அதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம். சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகளைப் பின்பற்றி நோய் வரும்முன் காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்- என்றார். (து-214)

# சோதனைப் பொருள்கள் தாராளம்

யாழ்ப்பாணம், ஏப்.16
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் இருக்கின்ற 'பிசிஆர்' இயந்திரத்தில் பயன்படுத்துவதற்குத் தேவையான சோதனைப் பொருள்கள் எங்களிடம் இருக்கின்றன. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மூன்று நாள்களுக்கு ஒரு தடவை கொழும்பு சுகாதார அமைச்சு எங்களுக்குத் தேவையான பரிசோதனைப் பொருள்களைத் திரும்பத் திரும்ப வழங்கிக் கொண்டிருக்கின்றது. எங்களிடம் ஓரளவு சோதனைப் பொருள்கள் கையிருப்பில் இருக்கின்றன. அது முடிய முடிய நாங்கள் பெற்றுக் கொள்கின்றோம்.
இன்னும் ஒரு சில வாரங்களில் எமது மருத்துவமனையில் உள்ள 'பிசிஆர்'இயந்திரத்தையும் இயக்கவிருக்கின்றோம். எமது பகுதிகளில் கூடுதலான சோதனைகளைச் செய்யுமாறு சுகாதார அமைச்சு எங்களுக்கு பணிப்புரை வழங்கியிருக்கின்றது. அதனால் மருத்துவமனையிலும் பரிசோதனைகளை ஆரம்பிக்கவுள்ளோம். இதன் ஊடாக ஒரு நாளைக்கு ஆகக் கூடியது 144 பேருக்கு சோதனை செய்ய முடியும், என்றார். (ஒ.5,105)

# சொந்த நாட்டுக்குத் திரும்பி வர உடனே நடவடிக்கை எடுக்குக !

## வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் அரசிடம் கோரிக்கை

கொழும்பு ஏப் 16
கொரோனாத் தொற்றுக் காரணமாக, வெளிநாடுகளில் தங்கியுள்ள இலங்கையர்கள் சிலர், தம்மை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
லண்டன், இந்தியா, டுபாய், மாலைதீவு ஆகிய நாடுகளைச் சேர்ந்த இலங்கையர்கள் சிலரே இவ்வாறு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ள னர். தற்போது இந்தியாவில் 600 க்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் உயர் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மே மாதம் 3ஆம் திகதி வரை இந்தியாவில் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப் பட்டுள்ளதால் தாம் மிகவும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக இந்த மாணவர்கள் சமூக வலைத்தளங்களில் காணொலிகள் மூலம் பதிவிட்டுள்ளனர்.
அதேபோல் விசேட வைத்திய பயிற்சிக்காக பிரித்தானியாவுக்குச் சென்றுள்ள இலங்கையைச் சேர்ந்த 85 வைத்தியர்களின் பயிற்சிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதால், இவர்களும் இலங்கைக்கு தம்மை மீள அழைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
அத்துடன் மாலைதீவு, டுபாய் ஆகிய நாடுகளில் பல்வேறு தேவை நிமித்தம் தங்கியிருக்கும் இலங்கையர்கள் சிலரும் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-114)

# மாவட்டம் தாண்டுவோரை தனிமைப்படுத்த வேண்டாம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16
இலங்கையினுள் ஒரு மாவட்டத்தில் இருந்து இன்னொரு மாவட்டத்துக்குச் செல்பவர்களைத் தனிமைப்படுத்த வேண்டாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
அத்தியாவசிய சேவைகள் மாத்திரமே தற்போது இயங்குகின்றன. இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மருத்துவர்கள், தாதியர்கள் பலர் பணியாற்றுகின்றனர். அவர்களில் ஒரு தொகுதியினர் இப்போது விடுமுறையில் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளனர். அரசால் அறிவிக்கப்பட்ட இடர் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் தமது ஊருக்குத் திரும்பியுள்ளனர்.
இந்த நிலையில் அவர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பும்போது தனிமைப்படுத்தப்படுவார்களா என்ற கேள்வி, வடக்கில் பணியாற்றும் மருத்துவத்துறையினரிடம் எழுந்துள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் கேட்ட போது,அவர்கள் தனிமைப்படுத்தப் பட மாட்டார்கள். இலங்கையினுள் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்துக்குச் செல்பவர்களை தனிமைப்படுத்த வேண்டாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் கடந்தவாரம் சுற்றறிக்கை ஊடாக அறிவுறுத்தியுள்ளார், என்றார். (ஒ.5)

# ஏறியது ரூபா

கொழும்பு,ஏப்.16
அமெரிக்க டொலருக்கான பெறுமதி அதிகரித்துள்ளதை அடுத்து, இலங்கை ரூபாவின் பெறுமதியும் அதிகரித்துள்ளது.
அமெரிக்க டொலர் ஒன்றின் நேற்றைய விற்பனை பெறுமதி 195.78 ரூபாவாகப் பதிவாகியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
கடந்த சில நாள்களாக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## கொமர்ஷல் வங்கியின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஏப்.16
நாட்டின் அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு கொமர்ஷல் வங்கி தனது நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதால் மக்கள் தமது வங்கித்தேவையை மேற்கொள்ள முடியாமல் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனை கருத்தில் கொண்டு கொமர்ஷல் வங்கி யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேச ரீதியாக நடமாடும் வங்கிச் சேவையை இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் நடத்தவுள்ளது.

இதன்படி இன்று வியாழக்கிழமை, சாவகச்சேரி கச்சாய் தேவாலயத்துக்கு அருகில் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையும், மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை முன்பாக முற்பகல் 10.30 மணியிலிருந்து 11 மணி வரையும்,கனகம்புளியடிச் சந்தியில் முற்பகல் 11.15மணியிலிருந்து 12 மணிவரையும், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் முன்பாக பிற்பகல் 12.15 மணியிலிருந்து ஒரு மணிவரையும், நுணாவில் வைரவர் கோவில் சந்தியில் பிற்பகல் 1.15 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரையும், கைதடி கமநலசேவை முன்பாக பிற்பகல் 2.15 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரையும் நடைபெறவுள்ளது.

இதேவேளை நாளை வெள்ளிக்கிழமை கொடிகாமம் பகுதியில் வரணி மத்திய கல்லூரிக்கு அருகாமையில் காலை 8 மணி தொடக்கம் 10.30 மணிவரையும், சுட்டிபுரம் அம்மன் கோவிலடியில் முற்பகல் 10.45 மணியிலிருந்து 11.45 வரையும், உசன் கந்தசுவாமி கோவிலடியில் மதியம் 12 மணியிலிருந்து 2 மணிவரையும், மிருசுவில் புனித நீக்கிலஸ் தேவாலயத்துக்கு அருகாமையில் பிற்பகல் 2.15 மணியிலிருந்து 4.15 மணிவரையும், கச்சாய் வீதி புனித பீற்றர் தேவாலயத்துக்கு அருகாமையில் மாலை 4.30 தொடக்கம் 5.30 வரையும் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. (ஐ-159)



# கசிப்பு நிலையம் நேற்று முற்றுகை

### ஒருவர் கைது

**பதுளை, ஏப்.16**

**பதுளை, கந்தேகெதர பகுதியில் நீண்டகாலமாக இயங்கி வந்த சட்டவிரோதக் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டு, சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பதுளை கலால் திணைக்களம் தெரிவித்தது.**

குறித்த சட்டவிரோதக் கசிப்பு உற்பத்தி நிலையம் பதுளை, கந்தேகெதர எனும் பகுதியில் நீண்டகாலமாக இயங்கி வருவதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து விரைந்த கலால் திணைக்கள அதிகாரிகள் நேற்றையதினம் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது அங்கு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை அவர்கள் கைது செய்தனர். அவரிடமிருந்து 330 லீற்றர் கோடா, மற்றும் ஸ்பீரிட் கசிப்பு உட்பட கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பதுளை கலால் திணைக்களம் தெரிவித்தது. (ப)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

### *சகோதரர்கள் இருவர் கைது*

கொழும்பு,ஏப்.16
மஹாஓய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 96 சந்திப் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.40 மணியளவில் நடந்துள்ளது.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

35 வயதுடைய நபர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். 23 மற்றும் 22 வயதுடைய சகோதரர்கள் இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியும் மீட்கப்பட்டது.

சம்பவ இடத்தில் ஸ்தல விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் கொலை என்பதனை உறுதிப்படுத்தியதுடன், சட்ட வைத்திய பரிசோதனையை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (க-22)

# கடும் மழை காரணமாக 27 குடும்பங்கள் பாதிப்பு

மலையகம்,ஏப்.16
சென். ஜோன் டிலரி தோட்டப் பகுதியில் பெய்த மழை காரணமாக 27 குடும்பங்களை சேர்ந்த 126 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் முழுமையாக பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களை சேர்ந்த 26 பேர் தற்காலிகமாக அப்பகுதியில் உள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை அப்பகுதியில் பெய்த கடும் மழை மற்றும் பலத்த காற்றுக் காரணமாக இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

குறித்த குடியிருப்புக்களின் கூரைகள் காற்றில் அள்ளுண்டு போயுள்ளதாகவும் குடியிருப்புக்களில் இருந்த பொருள்கள் சில சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகளை கிராம அலுவலர் செய்து வருவதோடு, மாற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## மரண அறிவித்தல்



### திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தன்

யாழ்ப்பாணம் நாச்சிமாகோவிலடியை பிறப்பிடமாகவும் கனடா ரொரண்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தன் அவர்கள் 14.04.2020 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் பூபதி தம்பதியரின் அன்பு மகளும், சிவஞானம் தம்பதியரின் அன்பு மருமகளும், கிருஷ்ணசாமி, ராசலட்சுமி, பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சிதமலர், ராகினி, றஜந்தி, சிவகுகானந்தன் (சிவா) ஆகியோரின் அன்பு தாயாரும், பரமானந்தன், சிறீஸ்கந்தராஜா, தர்மராஜா, ரேகா ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜீவ் (கல்யாணி) சுதர்சன் (கிருஷ்னலதா) பிரவீனா (ரஜீறன்) மாலதி (வேணுகோபன்), ரஞ்சித், அபிஷேக், அபிநயா அர்ச்சனா ஆகியோரின் பேத்தியும், துளசி, மிதுனா அவர்களின் பூட்டியும்
ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை காலை 5:00 மணியிலிருந்து 7:00 வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, உடனே தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

VISITATION : At
Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G

CREMATION & WITNESSING
Highland Hills Crematorium, 12492 Woodbine Avenue, Gormley, ON, L0H 1G0

**மேலதிக தொடர்புகளுக்கு:**
Chapel Ridge Funeral Home.
8911 Woodbine Ave Markham On.
L3R 5G1 Highland Hills Crematorium
12492 Woodbine Ave. Gormley. On.
L0H 1G0

**தகவல்: குடும்பத்தினர்.**
சிவா(மகன்) 647 271 8108
றஜந்தி (மகள்) 647 632 6756
ராகினி(மகள்) 647 331 5492
ரஞ்சிதமலர் (மகள்) ( யேர்மனி) 011492086291198

# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்





ஊரடங்கு உத்தரவால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள டிக்கோயாவில் வாழும் மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மனித நேய வேலைத்திட்டம் சர்வ மதத் தலைவர்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டது. இதன்படி சுமார் 450 குடும்பங்களுக்கு 3,500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. (ம)





தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினாலும் தொடர்ச்சியான ஊரடங்கு உத்தரவினாலும் அன்றாடம் கூலிவேலை செய்து தங்களுடைய வாழ்வை கொண்டு நடத்தும் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், மாத்தளன் பகுதிகளில் வாழும் அத்தகைய 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம)



வடமராட்சி கிழக்கு செம்பியன்று வடக்கு கிராமத்தில், கொரோனா வைரஸ் காரணமாக நடைமுறையில் உள்ள ஊரடங்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செம்பியன்பற்றிலிருந்து புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வாழும் உறவுகளால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-70)





தொண்டமனாறு அரசடியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் சுதந்திரதாஸ் தனது நிதி உதவியில், 1,300க்க மேற்பட்ட குடும்பங்களுக்கு பல லட்சம் பெறுமதியான நிவாரணங்களை வழங்கியுள்ளார். (ம-26)



மண்கும்பானைச் சேர்ந்த செல்வராஜா ஜெகநாதன் என்பவரின் நிதி உதவியில், மண்கும்பானில் வசிக்கும் மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)



நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழலைக் கருத்தில் கொண்டு, யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தினால் வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பகுதியில் வசிக்கும் 16 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)





எதிர்காலத்துக்கான பாதை என்னும் பிரித்தானியத் தொண்டு நிறுவனம், கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மக்களுக்கு பல்வேறு உதவிப் பொருள்களை வழங்கி வருகின்றது. அந்த நிறுவனத்தால் இதுவரை சுமார் 300 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)



கொக்குவில் இந்துக் கல்லூரி 1984/87 அணி மாணவர்கள் அனைவரும் இணைந்து கொரோனா நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தமது தொழில்களை இழந்து நாளாந்த உணவுத்தேவைகளை பூர்த்தி செய்யச்சிரமப்படும் 350 குடும்பங்களுக்கு அவர்களால் இதுவரை உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)





யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் 2010ஆம் ஆண்டில் உயர்தர வகுப்பில் கல்வி கற்ற மாணவர்கள் சிலரின் பங்களிப்பில், பெரியகடை கிராமத்தில் வசிக்கின்ற நலிவுற்ற 25 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (ம-23)

# உலக சுகாதார அமைப்புக்கான நிதியை நிறுத்திய அமெரிக்கா!

## சீனாவுக்குச் சார்பாக நடக்கின்றது என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் குற்றச்சாட்டு

வொஷிங்டன், ஏப். 16

**உலக சுகாதார அமைப்பு தனது அடிப்படைக் கடமையிலிருந்து நழுவி விட்டது என்று குற்றஞ்சாட்டியுள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், அந்த நாட்டுக்கு வழங்கி வந்த நிதியை நிறுத்தி உத்தரவிட்டார்.**



சீனாவின் வுகான் நகரில் உருவான கொரோனா வைரஸ் அங்கு ஏற்படுத்திய பாதிப்பைக் காட்டிலும் அமெரிக்காவை சேதப்படுத்தியதுதான் அதிகம். அமெரிக்காவில் இதுவரை 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். சுமார் 6 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸ், மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்கு பரவாது என்று தொடக்கத்தில் அறிவித்த உலக சுகாதார அமைப்பு, ஜனவரி மாதத்துக்குப் பின்புதான் மனிதர்கள் மூலம் மனிதர்களுக்கு பரவும் என்று கூறியது. இதனால் தொடக்கத்திலேயே சீனாவில் ஆய்வு செய்திருந்தால் அமெரிக்காவில் பெருத்த உயிரிழப்பை தடுத்திருக்கலாம் என்பது ட்ரம்பின் பெரிய குற்றச்சாட்டாக உள்ளது.

இது தொடர்பில் ட்ரம்ப் தெரிவித்ததாவது: ‘சீனாவுக்கு ஆதரவாக உலக சுகாதார அமைப்பு செயல்பட்டு வருகிறது. கொரோனா வைரஸ் பரவல் குறித்த தவறான தகவலையும், அதைத் தடுப்பது குறித்து சரியான நடவடிக்கைகளை கையாளத் தெரியாமல் இருந்ததால் உலக சுகாதார அமைப்புக்கு அமெரிக்கா சார்பில் வழங்கும் நிதியை நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளேன். உலக சுகாதார அமைப்பில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என அனைவருக்கும் தெரியும்.

உலக சுகாதார அமைப்பு நடுநிலையாக செயல்பட்டு அனைத்து நாடுகளுக்கும் ஆலோசனை தெரிவிக்க வேண்டிய நிலையில் கொரோனா வைரஸ் விவகாரத்தில் சீனாவுக்கு ஆதரவாக செயல்பட்டது.

அமெரிக்க வரிசெலுத்தும் மக்கள் ஆண்டுக்கு 40 கோடி டொலர் முதல் 50 கோடி டொலர்கள் வரை உலக சுகாதார அமைப்புக்கு நிதியாக வழங்குகிறார்கள். ஆனால், சீனா 4 கோடி மட்டுமே வழங்குகிறது. உலக சுகாதார அமைப்புக்கு அதிகமாக நிதி வழங்கும் நாடு அமெரிக்கா என்ற முறையில், எங்களுக்கு அதிகமான பொறுப்பு இருக்கிறது.

உலக சுகாதார அமைப்பின் பேரழிவான, ஆபத்தான முடிவுகளில் ஒன்று சீனாவிலிருந்தும் மற்ற நாடுகளில் இருந்து வருவோருக்கு தடை விதிக்கும்போது அதற்கு உலக சுகாதார அமைப்பு எதிர்ப்புத் தெரிவித்தது. நாங்கள் செய்த செயலை உலக சுகாதார அமைப்பு கடுமையாக எதிர்த்தது.

கொரோனா வைரஸ் குறித்து உலக சுகாதார அமைப்பு சரியான தகவல்களை மற்ற நாடுகளுக்கு உரிய நேரத்தில் பகிர தவறிவிட்டது, தனது அடிப்படை கடமையிலிருந்து விலகிவிட்டது. அதற்கு அந்த அமைப்பு பொறுப்பானதாகும். மனிதர்கள் மூலம் மனிதர்களுக்குப் பரவும் என்பதை கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதமே உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருக்க வேண்டும் - என்றார். (ம)

## துருக்கியில் 45 ஆயிரம் கைதிகள் விடுவிப்பு

இஸ்தான்புல், ஏப். 16

சிறைகளில் கொரோனாத் தொற்று ஏற்படாமல் இருக்க சுமார் 45 ஆயிரம் கைதிகளை விடுவிக்க துருக்கி அரசு முடிவு செய்துள்ளது.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் ஒன்றாக உள்ளது துருக்கி. அங்கு சுமார் 65 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து 400 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்று முன்தினம் மட்டும் 5,000 பேர் புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர். இதனால் கொரோனா அங்கு தாண்டவமாட வாய்ப்புக்கள் அதிகம் என்று கருதப்படுகின்றது. இதனால் தற்காலிமாக சுமார் 45 ஆயிரம் கைதிகளை விடுவிக்க துருக்கி அரசு முடிவு செய்துள்ளது. (ம)

## ட்ரம்பின் முடிவால் அதிர்ச்சியில் ஐ.நா

வொஷிங்டன், ஏப். 16

உலக சுகாதார நிறுவனத்துக்கான நிதியை நிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ள நிலையில், இதற்கு தனது அதிருப்தியையும் கவலையையும் தெரிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தீவிரமாக இருக்கும் இந்த நேரத்தில் உலக சுகாதார அமைப்புக்கோ அல்லது எந்த மனித நேய அமைப்புக்கோ நிதியை நிறுத்த இது உகந்த நேரம் அல்ல. உலக சுகாதார அமைப்புக்கு நாம் உதவ வேண்டும், ஆதரவளிக்க வேண்டும். கொரோனா வைரஸைத் தோற்கடிக்க உலக நாடுகளுக்கு உலக சுகாதார அமைப்பின் உதவி தேவை - என்றார். (ம)

## ஏவியது வடகொரியா

பியாங்யாங், ஏப். 16

உலக நாடுகள் கொரோனா பீதியில் உறைந்திருக்க, வடகொரியா ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது.




வடகொரியாவின் இந்த ஏவுகணைச் சோதனையை தென்கொரியா வெளிப்படுத்தியுள்ளது. இது தொடர்பில் தென்கொரிய ஊடகங்கள், வடகொரியாவின் கிழக்குப் பகுதி நகரமான மன்சோனில் உள்ள கடல் பகுதியில் வைத்து ஏவுகணை சோதனை நடத்தப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை 150 கிலோமீற்றர் தூரம் சென்ற பின்னர் கடலில் விழுந்தது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் ஆரம்பமான பின்னர் மட்டும் வடகொரியா இத்துடன் நான்கு தடவை ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது. (ம)

## ஒரே நாளில் 2,407 பேர் அமெரிக்காவில் பலி

வொஷிங்டன், ஏப். 16

கொரோனா வைரஸ் காரணமாக அமெரிக்காவில் நேற்றுமுன்தினம் மட்டும் 2,407 பேர் உயிரிழந்தனர். கொரோனா அவதானிக்கப்பட்டதில் இருந்து இந்தளவு பெரும் எண்ணிக்கையானோர் ஒரு நாட்டில் உயிரிழந்தமை இதுவே முதல் முறை.

சீனாவின் வுகானில் தோற்றம் பெற்ற கொரோனாவால் உலக நாடுகள் தற்போது கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. அமெரிக்காதான் அதிகம் பாதிப்படைந்த நாடாக உள்ளது. அங்கு இதுவரை சுமார் 6 லட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 27 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் அமெரிக்காவில் 2,407 பேர் உயிரிழந்தனர். (ம)



# இந்தியா பாகிஸ்தான் போட்டிகள் நடக்காது!

*கவாஸ்கர் பதிலடி*


புதுடெல்லி, ஏப். 16
இந்தியா - பாகிஸ்தான் இடையிலான கிரிக்கெட் போட்டிகள் நடைபெறாது. அவ்வாறு இடம்பெறுவதற்கு எந்தச்சாத்தியமும் இல்லை - என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர்.

இந்தியா - பாகிஸ்தான் தொடரை நடத்த வேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் வீரர்களான அப்ரிடி மற்றும் அக்தர் ஆகியோர் முனைப்புக் காட்டும் நிலையில், அவர்களின் முயற்சிக்கு இவ்வாறு பதிலடி கொடுத்துள்ளார் கவாஸ்கர்.

இது தொடர்பில் கவாஸ்கர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாபாகிஸ்தான் அணிகள் இடையே கிரிக்கெட் தொடர் நடைபெறுவதைக் காட்டிலும், லாகூரில் பனிப்பொழிவுக்குத்தான் அதிக வாய்ப்பு இருக்கிறது. உலகக்கிண்ணம், ரி20 உலகக்கிண்ணம், ஆசியக் கிண்ணம்உள்ளிட்டபொதுத் தொடர்களிலேயே இந்த இரு அணிகளும் விளையாடுவதற்கு வாய்ப்பு உள்ளது. தற்போது இந்தியாபாகிஸ்தான் அணிகள் இடையே கிரிக்கெட் போட்டிதொடர்நடைபெறுவது என்பது சாத்தியமில்லாத விடயமாகும் என்றார்.

இந்திய அணிக்கு உலகக்கிண்ணம் வென்று கொடுத்த முன்னாள் தலைவரான கபில்தேவும் இந்தியா - பாகிஸ்தான் இருதரப்புத் தொடருக்கு எந்த அவசியமும் இல்லை என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# இந்தியா - பாகிஸ்தான் தொடர் நடைபெறுமா?

## அக்தருடன் இணைந்தார் அப்ரிடி
## கபிலின் எதிர்வினையையும் கண்டிக்கின்றார்

*இஸ்லாமபாத், ஏப். 16*
*இந்தியா - பாகிஸ்தான் தொடரை நடத்துவதற்கு பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான அப்ரிடியும் விருப்பம் வெளியிட்டுள்ளார். இந்தியா - பாகிஸ்தான் தொடர் நடைபெறாது என்று தெரிவித்த கபில்தேவின் கருத்தையும் அவர் கண்டித்துள்ளார்.*




கொரோனா நிதி திரட்ட இந்தியா பாகிஸ்தான் 3 ஒருநாள் போட்டிகளில் ஆடலாம் என்று அக்தர் கருத்துத் தெரிவித்ததோடு பாகிஸ்தானுக்காக இந்தியா 10,000 வெண்ட்டிலேட்டர்களைத் தயாரித்துக் கொடுத்தால் ஜென்மத்துக்கும் நன்றிக்கடன் பட்டிருப்போம் என்ற ரீதியில் பேசினார்.

அதற்குக் கபில்தேவ் இது கிரிக்கெட் ஆடும் நேரமில்லை, வீரர்களை கொரோனா ஆபத்தில் சிக்கவைக்கலாமா? என்றும் மனித உயிரைவிட கிரிக்கெட் முக்கியமல்ல என்றும் சாடினார், ஆனால் அக்தருக்கு அவர் கருத்தைக் கூற உரிமை இருக்கிறது என்று அங்கீகரித்தார். ஆனால் அப்ரிடி, கபில்தேவ் தன் கருத்தைக்கூறுகிறார் என்ற குறைந்த பட்ச ஜனநாயகம் கூட இல்லாமல் கபில்தேவை விமர்சித்துள்ளார்.

'உலகமே கொரோனாவை எதிர்த்துச் சண்டையிட்டு வருகிறது. எம் பகுதியில் எம்மிடையே ஒற்றுமை வேண்டும். கபில் தேவின் எதிர்மறையான கருத்துக்கள் உதவாது. அக்தர் கூறியதில் நான் எந்தத் தவறையும் காணவில்லை. கபிலின் எதிர்வினை என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அவரிடமிருந்து இன்னும் நல்லதாக எதிர்பார்த்தேன், இது போன்ற இக்கட்டான தருணத்தில் கபில் இப்படி பேசியிருக்கக் கூடாது என்று கருதுகிறேன். விளையாட்டு மனிதர்களை ஒன்று சேர்க்கும் பாலம். கபில் பேச்சு ஏமாற்றமளிக்கிறது' என்றார் அப்ரிடி.

அக்தரும் 'நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை கபில் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். அனைவருமே பொருளாதார ரீதியாகப் பொறியில் சிக்கப் போகிறார்கள். அதற்காகத்தான் வருவாய் திரட்ட வேண்டும் என்றேன். நான் பரந்துபட்ட பார்வையில், பொருளாதார சீர்த்திருத்தம் பற்றி பேசினேன்.

உலகப் பார்வையாளர்கள் ஒரே போட்டியில் கவனம் செலுத்துவார்கள் இதன் மூலம் வருவாய் உற்பத்தியாகும், ஆனால் கபில் பணம் இருக்கிறது என்கிறார், ஆம் அவருக்குத் தேவையில்லை, ஆனால் மற்றவர்களுக்குத் தேவையில்லையா? எனவே இது விரைவில் பரிசீலிக்கப்படும் என்று நினைக்கிறேன். நான் நிறைய பயணித்திருக்கிறேன் மக்களுடன் உரையாடியிருக்கிறேன், இந்தியர்களைப் பற்றி உயர்வாகப் பேசி வருகிறேன். நம் நாடுகளில் வறுமை நிலவுகிறது. மக்கள் துயரம் என்னை துன்பப்படுத்துகிறது. மனிதனாகவும் முஸ்லிமாகவும் உதவுவது என் பொறுப்பு' என்று அக்தர் மீண்டும் தெரிவித்துள்ளார். (ம)

# ஆட்டத்தை வெற்றியுடன் முடிப்பதில் டோனி இன்னும் மிக ஆபத்தானவரே

## இப்படிப் புகழ்கின்றார் ஹசி

புதுடெல்லி, ஏப். 16
ஆட்டத்தை வெற்றியுடன் முடிப்பதில் டோனி இன்னும் ஆபத்தானவர். அவர் கிரிக்கெட் உலகம் உருவாக்கிய மிகச் சிறந்த வீரர்களில் ஒருவர் என்று புகழ்ந்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் ஹசி.




டோனி தொடர்பில் ஹசி மேலும் தெரிவித்ததாவது:

என்னைப் பொறுத்தவரை ஆட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதில் கிரிக்கெட் உலகம் உருவாக்கிய தலைசிறந்த வீரர் டோனிதான். எனது கருத்து கொஞ்சம் சர்ச்சையை ஏற்படுத்தலாம். கிரிக்கெட்டில் இதற்கு முன்பு சிறந்த பினிஷர்கள் இருந்தனர். ஆனால் நெருக்கடியான கட்டத்தில் டோனி அளவுக்கு யாரும் அமைதியாக இருந்ததில்லை. நம்ப முடியாத சக்தி அவரிடம் இருக்கிறது. பந்தை எப்போது எல்லைக்கோட்டை தாண்டி விரட்ட வேண்டும் என்பதில் தெளிவாக இருப்பார். அதை அவர் சரியாகச் செய்வார். அவருக்கு அந்த அளவுக்கு தன்னம்பிக்கை உண்டு. அத்தகைய தன்னம்பிக்கை என்னிடம் இருந்ததில்லை - என்றார். (ம)

# இன்னும் ஒரு வருடத்துக்கு கிரிக்கெட் தொடர் இல்லை

## அக்தர் இப்படிச் சொல்கிறார்

இஸ்லாமபாத், ஏப். 16
கொரோனா வைரஸ் தொற்று கட்டுக்குள் வராத நிலையில், கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெற குறைந்தது இன்னும் ஒரு வருடமாவது ஆகும் என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அக்தர்.



இது தொடர்பில் அக்தர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் கிரிக்கெட் விளையாடும் எந்த நாடும் கொரோனாவை இன்னும் முழுமையாகக் கட்டுப்படுத்தவில்லை. இதனால் கிரிக்கெட் தொடர் தற்போது மீண்டும் நடைபெறும் என்று என்னால் கூறமுடியவில்லை. குறைந்தது ஓர் ஆண்டாவது ஆகும் என்றார். (ம)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.04.2020 இல் வெளியிடப்பெற்றது.